# 2025

# වාර්ෂික කාර්යය සාධන වාර්තාව හා ගිණුම්

# வருடாந்த செயலாற்று அறிக்கை மற்றும் கணக்கறிக்கை

# Annual Performance Reports & Accounts



Designed : Satheeswaran (DO), Dist.sec Ampara

## දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - අම්පාර

## மாவட்ட செயலகம் – அம்பாறை

## District Secretariat – Ampara

<u>அரசாங்க அதிபரின் செய்தி</u>



புதுமை மிக்க சமுதாயத்தினைக் கொண்ட வளம்மிக்கதோர் மாவட்டமொன்றை உருவாக்கும் நோக்கில் முன்னோடியாக செயற்படுத்தப்படுகின்ற அம்பாறை மாவட்டத்தில் நிர்வாகத்தின் மத்திய நிலையமான மாவட்ட செயலகத்தினால் 2025 ஆண்டில் நிறைவேற்றப்படுகின்ற சேவைகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களை மையமாகக் கொண்டு 2002.09.12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கு அமைய, அம்பாறை மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் நிதிக் கட்டுப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டம் ஒரு முக்கிய நிர்வாக மாவட்டமாகவும், விவசாயம், மீன்பிடி, வணிகம், சுற்றுலா மற்றும் தொழில்துறை துறைகள் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு பெரிதும் பங்களிக்கும் ஒரு மாவட்டமாகவும் உள்ளது. பல்வேறு இன, மத மற்றும் கலாச்சார பின்னணிகளைக் கொண்ட மக்களுடன் பன்முக கலாசார சமூகத்தில் அம்பாறை மாவட்டம் சிறப்புப் பங்காற்றுகிறது.

வரலாற்று சிறப்புமிக்க திகாமடுல்ல நகரத்தின் மரபுரிமைகள் மற்றும் சாத்தியங்களைக் கொண்டுள்ள, தீகவாபி மற்றும் ரஜகல போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களிலிருந்து அழகிய அறுகம்பே கடற்கரை வரையிலான கலாச்சார மற்றும் சுற்றுச்சூழல் ஈர்ப்புகள், வரலாற்று நகரத்தின் பாரம்பரியத்தையும் ஆற்றலையும் தன்னகத்தே கொண்டுள்ளதால் அம்பாறை மாவட்டத்தை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா மையமாக மாற்றியுள்ளன. விவசாய மற்றும் மீன்பிடி கைத்தொழில் மூலம் நாட்டின் தேசிய உற்பத்திக்கு அளிக்கப்படும் பங்களிப்பும் மகத்தானது. கல்வி மற்றும் தொழில்நுட்ப நிறுவன அமைப்பு ஊடாக நமது மாவட்டத்தின் மனித வளங்கள் தரமான முறையில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

2025 ஆம் ஆண்டில் நாம் முகங்கொடுத்த நிதி சவால்களின் போதும், மாற்று உத்திகள் மற்றும் புதுமையான முகாமைத்துவ நுட்ப முறையை கடைபிடித்து, அரச கொள்கைகளைப் பின்பற்றி எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை பூர்த்திசெய்து அபிவிருத்தி விடயங்களை மேற்கொள்தல், Clean Sri Lanka போன்ற தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல், "அஸ்வெசும போன்ற சமூக நலனோம்பல் வேலைத்திட்டங்கள் ஊடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், உழுந்து, பயறு போன்ற பயிர்ச் செய்கைகளை மேம்படுத்தல் ஊடாக கிராமிய வாழ்வாதாரங்கள் மூலம் பொருளாதர நிலைபேற்றை ஏற்படுத்துவதற்கு மாவட்ட செயலகம் பெரிதும் பங்களிப்பாற்றுகிறது.

இவ் அறிக்கைக்குள் மாவட்ட நிர்வாகத்தின் கீழ் செயற்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டம், சமூக நலனோம்பல் வேலைத்திட்டங்கள், நிர்வாக மற்றும் அபிவிருத்தி செலவுகள், வருமான முகாமைத்துவம் மற்றும் அரச நிதிப் பயன்பாட்டின் வினைத்திறன் தொடர்பான விளக்கமான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அரசின் நிதிச் சட்டம், ஒழுங்குகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக, பொறுப்புடனும் வெளிப்படைத் தன்மையுடனும் நிதி முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்துதல் மாவட்ட நிர்வாகத்தின் பிரதான பொறுப்பொன்றாக கவனத்தில் கொள்ள முடியுமாவதுடன், அந் நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு சகல பிரிவுகள் மற்றும் தாபனங்களுடன் நெருக்கத்துடன் செயற்பட்டனர். இதில் குறிப்பிட்டட நோக்கங்கள் மற்றும் இலக்குகளை வெற்றியடையச் செய்வதற்குத் தேவையான உபதேசம் வழங்கிய சர்வமதத் தலைவரகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கிய அரசியல் அதிகாரிகளுக்கும் அதற்கு மேலதிகமாக இப் பணியின் பொருட்டு எம்முடன் தொடர்புபட்ட அம்பாறை மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள் உட்பட பிரதேச செயலகங்களின் ஆளணியினர் மற்றும் ஏனைய அரச, நியாயாதிக்க சபை, அரச சார்பற்ற தலைவர்கள் மற்றும் ஆளணியினர் சிவில் சமூக அமைப்புக்கள், கிராமிய குழு போன்றனவற்றையும் மிகவும் நன்றிக்கடனுடன் நினைவு கூறுகிறேன். மேலும் மாவட்ட செயலகத்தின் மேலதிக மாவட்ட செயலாளர்கள் உட்பட சகல பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் ஆளணியினருக்கும் எனது பாராட்டைத் தெரிவிக்கின்றேன்.

அத்துடன் இவ் அறிக்கை தயாரிப்பதற்கு பங்களிப்புள்ள மாவட்ட செயலகத்தில் பிரதான கணக்காளர் மற்றும் கணக்காளர் உட்பட சகல நிதிப் பிரிவின் ஆளணியினருக்கு மற்றும் அதனுடன் தொடர்புடைய சகல தரப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கிறேன். மாவட்டத்தின் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, நிலையான அபிவிருத்திக்கு வினைத்திறனான நிதி முகாமைத்துவம் மற்றும் உயர்ந்த பொதுமக்கள் சேவையொன்றை வழங்குவதற்கு எமது அர்ப்பணிப்பினை மேலும் வலுப்படுத்துகின்றேன்.

மாவட்டத்தின் சமூக பொருளாதார மற்றும் பௌதீக அபிவிருத்தி நிலைபேறாக மேம்படுத்தல் மற்றும் பொதுமக்கள் சேவையொன்றை வினைத்ததிறனாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் வழங்குவதை நோக்காகக் கொண்டு 2025 ஆண்டிற்குள் மேற்கொள்ளப்பட்ட நிதி முகாமைத்துவ செயற்பாடு தொடர்பாக இவ் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை இவ்வாறு சமர்ப்பிக்கிறேன்.

சின்தக அபேவிக்ரம,
அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்,
அம்பாறை மாவட்டம்.

# உள்ளடக்கம்


**01- நிறுவனத்தின் விபரம் நிறைவேற்றுப் பொழிப்பு** ..... 1

01.1. அறிமுகம் ..... 1

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள் ..... 6

1.3. பிரதான செயற்பாடுகள் ..... 7

1.4 அம்பாறை மாவட்ட செயலகத்தினுடைய ஒழுங்கமைப்பு அட்டவணை ..... 8

**1.5** *மாவட்ட செயலகம் மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்கள்* ..... 9

**1.6** ***அமைச்சு / திணைக்களம் /மாகாண சபையின் கீழுள்ள நிறுவனங்கள் நிதியங்கள்*** ..... 10

1.7 வெளிநாட்டு நிதியீட்டத்திலான விபரங்கள் ..... 10

**02 . முன்னேற்றம், சிறப்பு அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்** ..... 11

**03. 2025 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை** ..... 16

03.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று ..... 16

3.2. நிதிநிலைமை பற்றிய கூற்று ..... 17

3.3. காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று ..... 18

3.4 நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் ..... 19

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை ..... 36

3.6 ஒதுக்கீட்டின் பயன்பாட்டின் செயலாற்றுகை ..... 37

3.7. நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/ மாவட்ட செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு ..... 38

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை ..... 42

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ..... 43

**04. செயற்திறன் குறிகாட்டிகள்** ..... 63

4.1 நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டிகள் (செயற்திட்டத்தின் அடிப்படையில்) ..... 63

**05. நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான செயற்திறன்** ..... 64

5.1 அடையாளம் காணப்பட்ட நிலையான வளர்ச்சி இலக்குகள் ..... 64

5.2 நிலையான வளர்ச்சி இலக்குகளின் சாதனை மற்றும் சவால்களை சுருக்கமாக விளக்குதல் ..... 79

**06. *மனித வள விபரம்*** ..... 80

06.1 ***பதவியணி முகாமைத்துவம்*** ..... 80

06.2 **பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக** ..... 80

06.3 ***மனித வள அபிவிருத்தி*** ..... 81

**07 .இணக்கப்பாட்டு அறிக்கை** ..... 82

# 01. அத்தியாயம்
## 01- நிறுவனத்தின் விபரம் நிறைவேற்றுப் பொழிப்பு
### 01.1. அறிமுகம்

பழைய திகாமடுல்ல மக்கள் குடியேற்றத்திற்கு உட்பட்டதான தற்போதைய அம்பாறை மாவட்டமானது இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ளது. இப்பூமியானது இடத்துக்கிடம் மலை செறிந்துள்ள தரையாக உள்ளது. இத் தரையானது கடல் மட்டத்திலிருந்து பொதுவாக 200 அடி வரையிலும், மலை உச்சியிலிருந்து 1000 அடி உயரத்திலும் அமைந்துள்ளது. இது உண்மையிலேயே சகல வளம் நிறைந்த பூமிப் பிரதேசமாக உள்ளது. ஊவாவின் மலைத்தொடரின் மேலால் சூழ்ந்துள்ள இருள் நிறைந்த திரையுடன் ஆரம்பித்து கிழக்கின் கரையோரம் வரைக்கும் தொடர்ச்சியான வயல் நிலமாகும். இப் பிரதேசமானது மனதைக் கவரும் காட்சிகளை காட்டி மிளிர்ந்து கொண்டிருக்கிறது. உரிய காலத்தில் பெய்யும் மழை நீரானது நிறைந்து களப்புப் பிரதேசத்தை அழகுபடுத்துகின்றது. தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காற்று வீசும்போது செடிகள் வேளாண்மையால் மூடப்பட்டு பசுமை நிறைந்த சமுத்திரத்தின் அழகை வெளி க்காட்டுகின்றது.

வேளாண்மை வளர்ந்து வரும்போது சிங்களவர், தமிழர், மற்றும் முஸ்லிம் விவசாயிகளின் பறன்கள் வயல் புறங்களில் இடத்துக்கு இடம் தோற்றம் பெறுகின்றது. வயல்களில் உள்ள வேளாண்மைகள் முற்றி வரும்போது தூரத்தில் உள்ள காடுகளில் இருந்து வரும் யானைகள், பன்றிகள், மயில்கள் போன்ற காட்டுப் பிராணிகளை காண முடியும். மீண்டும் அறுவடையை மேற்கொண்ட பின்னர் இப்பூமியானது ஆடுகள், எருமைகள், மாடுகள், போன்றவை கூட்டம் கூட்டமாக நிறைந்து அழகான காட்சியைக் கொடுக்கின்றது. உலர் காலமாகிய ஆவணி மாதம் ஆகும்போது சூரிய ஒளி முழுவதும் இப்பூமியில் பட்டால் எந்தவொரு பிராணிக்கும் புல் தரையில்லாத கடினமான நிலமாக வேகமான காற்று வீசி முழுப் பிரதேசமும் புழுதியால் சூழப்பட்ட பிரதேசமாக மாறிவிடும்.

மட்டக்களப்பு மாவட்ட செயலாளரின் கீழ் நாட்டிலுள்ள அதிகாரிகளினால் நிர்வாக கடமைகள் மேற்கொள்ளப்படும் இப்பூமி பிரதேசத்தில் 1924 ஆம் ஆண்டில் வேவ்கம்பத்துவ எனும் புதிய நிருவாக பிரிவு நிறுவப்பட்டது. வாத்தாவ என்பவர் அப்பிரிவின் முதலாவது தலைவராக இருந் ததுடன் புராதன நீர்ப்பாசன வேலைகள் மீண்டும் புனர்நிர்மானம் செய்யும் வேலைகள் அக்காலத்தினுள் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தியினை உறுதிப்படுத்தி டி.எஸ்.சேனநாயக்கா என்பவர் கல்ஓயா அபிவிருத்தி வேலைத்திட்டத்தை ஆரம்பித்தார். இவ் விவசாய குடியேற்றத் திட்டத்தின் சிறந்த படைப்பு அம்பாறை மாவட்டமாகும். வேவ்கம்பத்துவ, பின்தன்பத்துவ, பாணம்பத்துவ, சம்மாந்துறைப்பத்துவ, நிந்தவூர்பத்துவ, அக்கரைப்பற்று உள்ளடங்கலாக பழைய நிர்வாக அலகுகளை ஒன்றுசேர்த்து 1961ம் ஆண்டில் அம்பாறை என்ற பெயரில் தனியொரு நிருவாக மாவட்டமாக நிறுவப்பட்டது. 1961ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ம் திகதி திரு.ஜே.டி.எஸ்.டி.லியனகே என்பவர் இதன் முதலாவது அரசாங்க அதிபராக நிருவாகப் பணிகளை ஆரம்பித்தார் 1980ம் ஆண்டில் மகாவலி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மகாவலி சி வலயமான தெஹியத்தகண்டி பிரதேசம் இம் மாவட்டத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்டது.

தற்போதைய அம்பாறை மாவட்டமானது சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில், அம்பாறை ஆகிய தேர்தல் தொகுதிகளையும், 19 பிரதேச செயலக பிரிவுகளையும் 01 உபபிரதேச செயலகம், 503 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் மற்றும் 614 கிராமங்களையும் உள்ளடங்கியதாக உள்ளது.

அதில் 2 மாநகரசபையும் 1 நகரசபையும் 17 பிரதேச சபையும் 14 பொலிஸ் நிலையங்களும் உள்ளன. 115 கி.மீ தூரத்தினைக் கொண்ட அழகு மிக்க கடற்கரையும் இடத்துக்கிடம் அமைந்துள்ள. மலைக்குன்றுகளும் ஊருக்கு ஊர் அமைந்துள்ளன. ஆறுகள், குளங்கள் ஊடாக வரும் நீரினால் செழிப்புற்று வளரும் வயல்வெளி நிலங்கள் வனவிலங்குகள் சுதந்திரமாக நடமாடக்கூடிய காடுகளும் இவ் மாவட்டத்தின் அழகினையும் பெறுமதியினையும் மேலோங்கச் செய்கின்றது. இம் மாவட்டத்தின் பல்லினமத, பல்லின கலாச்சாரத்தினை வெளிக்கொணரும் 202 விகாரைகளும் 185 இந்து ஆலையங்களும், 332 முஸ்லிம் பள்ளிவாசல்களும், 60 கிறிஸ்தவ தேவாலயங்களும் உள்ளன.

சனத்தொகை புள்ளி விபர தகவல்களுக்கு ஏற்ப அம்பாறை மாவட்டத்தில் சனத்தொகையானது **744,551** ஆகும் குடும்பங்களின் எண்ணிக்கை **202,861** ஆகும். இந்த முழுச் சனத்தொகையில் **45.6%** முஸ்லிம்களும், **37.1%** சிங்களவர்களும், **16.1%** தமிழ் மக்களும் ஏனைய இனத்தவர் **0.4** % ம் வாழ்வதுடன், இங்கு சகல இனத்தவர்களும் ஒற்றுமையுடனும், சகவாழ்வுடனும் வாழ்ந்து வருகின்றனர். இம் மாவட்டமானது **4,476** சதுரகிலோ மீற்றர் அளவினை கொண்டுள்ளதுடன். இம் மாவட்டத்தின் பயிர் நிலங்களின் அளவு 1,264.47 சதுரகிலோ மீற்றர் ஆகும். நீர்நிலைகள் 328.03 சதுரகிலோ மீற்றரும் வனாந்தரங்களின் (Forest & Range Land) 2,097.53 சதுரகிலோ மீற்றராகவும் உள்ளன. இம் மாவட்டத்தின் வருடாந்த மழை வீழ்ச்சியாக 1,886 மில்லி லீற்றர் மழைவீழ்ச்சி கிடைக்கப் பெறுவதுடன் பொதுவான வெப்பநிலை 29.81 செல்சியஸ் மட்டத்தில் உள்ளது.

நாட்டின் மிகப்பெரிய நீர்தேக்கமான சேனநாயக்கா சமுத்திரத்தை அண்டிய நீர்ப்பாசன திட்டத்தினூடாக வளம் பெறுகின்ற நெற்செய்கையில் 22.5% நாட்டின் விவசாயத்துறையில் “ஜாத்தியே வீ பிஸ்ஸ எனும் பெயரினை ஈட்டிக் கொடுத்ததும் அம்பாறை மாவட்டமாகும். உவர் நீர் மற்றும் நன்னீர் மீன்பிடித் துறைகளினூடாகவும் தேசிய உணவு உற்பத்தியில் முன்னுரிமையை இம்மாவட்டம் பெற்றுக் கொடுத்துள்ளது. பல்கலைக்கழகம், உயர் தொழில்நுட்ப நிறுவனம், கல்வியற் கல்லூரிகள், தொழில்நுட்ப கல்லூரிகள், தொழிற் பயிற்சி நிறுவனம் மட்டுமல்லாது தேசிய பாடசாலைகள் உள்ளிட்ட முன்னேற்றமடைந்த பாடசாலை கல்வி நிலையங்கள் ஒன்றிணைந்து கல்வித்துறையின் மிகவும் உயர்ந்த தரத்தினை பெற்றுக் கொடுப்பதற்கு அம்பாறை மாவட்டத்திற்கு இயலுமாய் உள்ளது. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் உற்பத்திதிறன் விருத்தியை பெற்றுக் கொடுப்பதற்கும் சுகாதார சேவைக்கும் சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றது மிகவும் சிறந்ததொரு பாக்கியம் என்றே கூற வேண்டும். சுற்றாடல் ரீதியான கவர்ச்சி மிக்க கல்ஓயா தேசிய பூங்கா, குமண தேசிய பறவைப்பூங்கா, லாகுகல தேசிய பூங்கா அறுகம்பை சர்பின் கரையோரம் மட்டுமல்லாது கலாசார ரீதியாக முக்கியத்துவம் பெற்றுள்ள ரஜகல, தீகவாபிய, மகுள்மஹா விகாரை, புத்தங்கல, உகந்தை ஆலயம் கடற்கரைப் பள்ளி ஆகியவற்றை உள்ளிட்ட முக்கிய இடங்கள் காரணமாக உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளின் உறைவிடங்களாகவும் மாறியுள்ளது.

## மாவட்டத்தின் சரித்திரப் பின்னனி

புராதன இலங்கையானது உருகுணை, மாயா, இராஜரட்டை எனும் மூன்று இராட்சியங்களாக இருந்துள்ளது. உருகுணை இராஜதானியின் மிக முக்கிய செல்வந்தமாக கருதப்பட்ட தீகவாபி அல்லது திகாமடுல்ல இராஜதானியின் வரலாறு புத்தர் காலம் வரைக்கும் செல்வதாக சரித்திரச் சான்றுகளின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது. வம்சாவழிக் கதைகளின் பிரகாரம் புத்தபெருமான் பரிநிர்வானமடைதலை காட்டுதல் இடம்பெற்ற பொழுது தான் விஜயன் இலங்கைக்கு வந்ததாக கூறப்படுகின்றது. மனிக் அக்கித்த நாகர் அரசரின் அழைப்பில் புத்தபெருமான் மூன்றாவது

முறையாக இலங்கைத்தீவிற்கு எழுந்தருளப்பட்ட மங்கள பயணத்தின் போதே தீகவாபியில் எழுந்தருளியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. விஜய மன்னனின் பின்னர் ஆட்சிக்கு வந்த பண்டுகஸ்தேவ மன்னனது காலத்திலே ஆரியர் குடியிருப்பொன்றாக அம்பாறை பிரதேசம் தோற்றமாகியுள்ளது. பண்டுகஸ்தேவ மன்னனது இராணியான கத்தியாயனா குமாரியின் சகோதரனான தியாகு குமாரனால் தோற்றுவிக்கப்பட்ட தியாயுகாமம் பின்னர் தீகவாபி மற்றும் திகாமடுல்ல ஆகிய பெயர்களில் அழைக்கப்படுவதாக வம்சாவழிக் கதைகளில் கூறப்பட்டுள்ளது.

தீககாமினியின் புத்திரரான பண்டுகாவய குமாரனால் அனுராதபுரம் தனது ஆட்சிக்குட்படுத்தப்பட்டு அனுராதபுரத்திலே தலைநகரமும் அமைக்கப்பட்டது. அதிலிருந்து அனுராதபுர பேரரசின் கீழான ஒரு நிருவாகப் பிரதேசமாக திகாமடுல்ல ஆட்சி செய்யப்பட்டதுடன் இது பிரதான தானியக் களஞ்சியமாகவும் விளங்கியது. பொலநறுவை இராஜதானி வீழ்ச்சியடைந்து ஆட்சியதிகாரம் தென்மேல் பிரதேசத்திற்கு தள்ளப்பட்டதுடன் அம்பாறை பிரதேசம் வனமாக தோற்றமாகியது.

மகாசேன மன்னனது பாரிய நீர்ப்பாசன தொழில்துறைத் திட்டம் கிழக்கில் வித்தன்னை பிரதேசத்திலிருந்து தமனகடுவ மற்றும் சேருநுவர ஊடாக கண்டி வரையும் விரிவடைந்திருந்தது. சுய அபிவிருத்தி நடவடிக்கையின் போது உருகுணையை மறக்க முடியாதுள்ளது. நீண்டகாலமாக அபிவிருத்தியடைந்துள்ள நீர்ப்பாசன தொழில்துறை தொடர்பான சிதைவுச் சின்னங்களை அம்பாறை மாவட்டதினுள் சுற்றி வருகை தருகின்ற சந்தர்ப்பத்தில் காணமுடிகிறது. இலங்கையின் வரலாற்று கல்வெட்டுக்கள் பேணப்படுவதற்கு முன்னர் கல்ஓயா மிட்டியாவத்தை வேடுவ மக்களது உணவு நிலமாக இருந்ததாக பேராசிரியர் ஆர்.எல்.வுறோக்கியரினால் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் ஆதி ஆரியரினால் நிறுவப்பட்டுள்ள கி.மு. **03**ம் நூற்றாண்டு வரையான கல்வெட்டுக்களில் காணக்கூடியதாக உள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் வரலாறு தொடர்பாக பேசப்படுகின்ற ரஜகல பிரதேசம் பெறுமதிமிக்க சரித்திர ரீதியான தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ள ஓர் பிரதேசமாகும். இங்கு காணப்படுகின்ற தாதுகர்ப்ப சிதைவுச்சின்னங்களின் இத்தீவின் வளர்ச்சிக்காக வந்துள்ளது. இட்டித்திய மற்றும் மஹிந்த தேரரர்களின் தாதுகர்ப்பம் என அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இது மஹிந்த தேரரின் இலங்கைப்பயணம் மற்றும் அவருடன் வந்த இட்டத்திய தேரர் பற்றியும் மஹாவம்ச செய்தி உறுதிப்படுத்துகின்றது. மஹிந்த தேரர் பரிநிர்வான மடைந்த பின்னர் தந்ததாதுக்கள் புதையலாக வைக்கப்பட்டு நாடுமுழுவதிலும் தாதுகர்ப்பங்கள் கட்டப்பட்டுள்ளதாக செய்திகள் உறுதிப்படுத்துகின்றது.

இதனிடையில் ரஜகலயில் கிடைத்துள்ள மற்றுமோர் கடிதத்தில் துட்டகைமுனு மன்னனின் இராணி எனக்கூறப்பட்ட ரபிதா என்னும் பெண்ணைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது சரித்திர ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கடிதமாகும். அத்துடன் நந்தமித்திரி இராட்சனி மற்றும் துட்டகைமுனு மன்னன் ஆகிய இரண்டு குடும்பங்களுக்குமிடையே விவாக சம்பந்தம் இருந்ததாக சான்று வழங்குகின்ற கல்வெட்டு ரஜகலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த கல்வெட்டையும் அம்பாறை மாவட்டத்தின் ஒமுனுகல கல்வெட்டையும் ஒன்று சேர்த்துப் பார்க்கின்றபோது துட்டகைமுனு மன்னனின் மகளும் நந்தமித்தரியின் மகனும் விவாகம் செய்து கொண்டதாகவும் சாட்சியமளிக்கின்றது.

தச நூற்றாண்டின் கொண்ட வெட்டுவான் கல்வெட்டை மிக விசேட முக்கியத்துவம் மிக்க சரித்திர ரீதியான மூலாதாரமாக கல்விமான்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். அக் கல்வெட்டின் பிரகாரம் அனுராதபுர யுகத்தின் இறுதி அரைவாசி காலகட்டத்தின் போது சச்சிரிய சிங்க அம்பாறையில்

வாழ்ந்ததாக தெளிவாக உறுதிப்படுத்தப்படுகின்றது. அதில் கூறிய கிராமம் தன்னிறைவுக் கிராமம் என்றும் விற்பனைக்காக வெளியிலிருந்து பொருட்கள் கொண்டு வர வேண்டியதில்லை என்று பெயரிடப்பட்டுள்ள கற்களையும் கொண்டுள்ளது. அது போலவே இப்பிரதேசம் அனுராதபுர இராஜதானிக்குட்பட்டு ஆட்சி செய்யப்பட்டதற்குமான தகவல்களும் அந்தக்கல்வெட்டிலே சொல்லப்படுகின்றது.

பொலநறுவை யுகத்தின் போது அம்பாறையை முக்கிய இடமாக உரித்தாக்கிக் கொண்டதற்கான சாட்சியங்கள் வரலாற்று ரீதியாக கிடைத்துள்ளது. சோலி ஆதிபத்தியத்திலிருந்து நாட்டைமீட்டெடுத்து நாட்டினை ஐக்கியப்படுத்துவதற்காக மகா விஜயபாகு மன்னனால் **(1065–1110)** எடுத்துச் சென்ற விடுதலை வியாபாரத்திற்கும் திகாமடுல்ல உதவியளித்துள்ளது. என்பதற்கான தகவல்களும் உள்ளன. திகாமடுல்லையிலே அவரினால் செய்யப்பட்ட போர்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. சுகனா ரபினாவின் ஆதிபத்தியத்திற்கும் திகாமடுல்ல உட்பட்டிருந்ததாக தகவல்களும் கிடைத்துள்ளது மகாபராக்கிரபாகு மன்னன் **(1133–1180)** தந்ததாதுக்களை பெற்றுக்கொள்ள சுகனா ரபியாவுடன் யுத்தம் செய்ததும் தீகவாபியிலேயே என்று இலங்கை பல்கலைக்கழகத்தின் இலங்கை வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை வரலாற்றின் ஓர் காலத்தில் தலதா தேரர்களின் உரித்தும் கூட தீகவாபிக்கே உரித்தாகி இருந்துள்ளது என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

கீர்த்திசிறிராச சிங்கன் அரசன் **1756** வருடங்களில் தீகவாபிக்கு வந்து தீகவாபி தாதுகர்ப்பத்தை புணரமைப்புச் செய்து அவ்விகாராதிபதி வந்திகொட நிக்றோத நாயக்க தேரருக்கு பூசையும் செய்துள்ளதாக தீகவாபி அரும்பத விளக்க நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்செய்தி வம்சாவழி செய்திகளினாலும் உறுதிப்படுத்தப்படுவதுடன் தீகவாபி தாதுகர்பத்தின் மேற்கு வாசலிலே அண்மைக்காலம் வரையும் தெரிந்து கொள்ளக்கூடியதாக காணப்பட்ட அழகொழிந்து போயுள்ள சித்திரக் குறிப்புக்கள் கண்டி யுகத்திற்குரிய சித்திர சம்பிரதாயத்திற்கு உரித்தானதெனவும் தெரியவந்துள்ளது. **1818**க்கு பின்னர் அம்பாறை பிரதேசத்தில் இடம்பெற்ற முக்கியமான நிகழ்வொன்றாக சுட்டிக்காட்ட முடிவது நீர்ப்பாசன தொழிற்துறையின் அபிவிருத்தியின் போது பிரித்தானியர்கள் காட்டியுள்ள பங்களிப்பாகும் விசேடமாக **1853**ல் சேர் ஹென்றி றொட் ஆளுணர் அவர்கள் கிழக்கு மாகாணத்திற்கு வருகைதந்து இந்த பிரதேசத்தின் நீர்ப்பாசனத் துறையின் அபிவிருத்திக்காக பணம் வழங்கி வைத்ததன் முக்கியத்துவம் தொடர்பாக விளங்கிக்கொண்டு அக்கால பிரித்தானிய அரசும் நீர்ப்பாசன தொழில்துறையை புணரமைப்பதற்காக பணம் வழங்கி முதலீடு செய்வதற்கான காரணமாக அமைந்திருந்தது.

இதன் கீழேயே அம்பாறை மாவட்டத்திற்குரித்தான திவுலானை சடயந்தலாவை மற்றும் சாகாமம் போன்ற நீர்த்தேக்கங்கள் புணரமைப்பு செய்தலும் **1880** தசாப்தத்தின் போது பட்டிப்பளை ஆற்றுத்திட்டம் ஆரம்பிப்பும் விசேடமாக நிகழ்ந்துள்ளது. பட்டிப்பளை ஆற்றுத்திட்டத்தின் கீழ் அம்பாறைக்குளம் கொண்டவெட்டுவான் குளம் போன்ற நீர்நிலைகளும் கல்ஓயா கங்கை நடுவே அணைக்கட்டுக்கள் அமைக்கப்பட்டும் **40000** ஏக்கர் அளவில் பயிர்ச்செய்கைக்கான நீரை வழங்கலுடன் பாரிய வயல் வெளியாகவும் இலங்கைத் தீவில் அம்பாறை மாவட்டத்திலே காணப்படுகின்றது.

இதன்பின்னர் **1930**ம் தசாப்தத்தின் போது கல்ஓய நீர்ப்பாசனத்திட்டம் தொடர்பாக அடிப்படையான நோக்கங்கள் திரு.ஹேன்றி நீர்ப்பாசன பணிப்பாளரினால் முன்னிலைப்படுத்தப்பட்டதுடன் மீண்டும் ஒருமுறையாக கிழக்கிலே அம்பாறை அபிவிருத்தியின் மத்திய நிலையமாக ஆக்கப்பட்டது. விசேடமாக நீர்ப்பாசன தொழிற்துறை வரலாற்றில் புதிய நிலைப்பாட்டினை ஆரம்பித்து

உயர்நிலத்தைச் சார்ந்ததாக ஆழமான நீர்தேக்கங்கள் அமைத்து நீர்ப்பாசனத்திற்கு தேவையான நீரை வழங்கும் வழிமுறைகளை திட்டமிடுதல் கல்ஓய நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டத்தின் கீழேதான் இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் பிரித்தானியர் ஆட்சியில் புதிய அத்திவாரத்தை அமைத்துக் கொள்வதற்காக உதவியளித்துள்ள கோல்புறூக்கமரன் திட்டத்திற்கமைய **05** மாகாணங்களாக இலங்கை பிரிக்கப்பட்டது. அதிலே அம்பாறை பிரதேசம் கிழக்கு மாகாணத்திற்குள் அடங்கியிருந்தது. கிழக்கு மாகாணம் திருகோணமலை மட்டக்களப்பு ஆகிய இரு மாவட்டங்களையும் தமன்கடுவ, விந்தன்ன ஆகிய பிரதேசங்களையும் உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. இவ்வாறு அமைக்கப்பட்ட மாகாணங்கள் மீண்டும் மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டது. அதற்கமைய கிழக்கு மாகாணமானது திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களைக் கொண்டமைந்ததாகும். இதிலே மட்டக்களப்பு மாவட்டத்தினுள்ளே திகாமடுல்லையும், விந்தனையும் அமைந்திருந்தது. **1837**ல் விந்தனை பதுளை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. **1961** ஆண்டிலிருந்து அம்பாறை மாவட்டம் நிறுவப்படும் வரைக்கும் திகாமடுல்ல நிர்வாக பிரிவுகளுக்கு ஆளாக்கப்படவில்லை.

## 1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

**நோக்கம்**

புதுமை மிக்க சமுதாயத்தினைக் கொண்ட வள மிக்கதோர் மாவட்டம்

### பணிகள்

மாவட்டத்திலுள்ள வளங்கள் முழுவதையும் நல்லாட்சிப் பொறிமுறையின் ஊடாக முகாமைத்துவப்படுத்தி நிலையான அபிவிருத்தியினை முன்னெடுத்துக் கொண்டு சுதந்திரமானதும், பாதுகாப்பான மனம் கவர்ந்த சூழலில் அறிவு, திறமை, ஆக்கம் மற்றும் சுகதேக தன்மை நிறைந்த மிகவும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தினைக் கொண்ட மக்களை உள்ளடக்கிய வள மிக்க மாவட்டத்தினை கட்டியெழுப்புதல்

### பிரதி பலன்கள்

- உணர்ச்சி பூர்வ மிக்க அரச சேவை குழாத்தினரை தேடிவரும் அனைவருக்கும் மனதை கவரும் விதத்தில் புதுமை மிக்க நம்பிக்கையான சேவை
- புதுமையை தேடிச் சென்று உடனடியாக தீர்வுகாண முயலும் பணிக் கலாச்சாரம்.
- தூய்மையான மற்றும் பசுமை மிக்க சூழலினூடாக அத்தியவசியமான தேவைப்பாட்டை நிறைவேற்றிக் கொள்ளும் அழகு மிக்க சூழல்
- நல்லாட்சிக்கு இட்டுச் செல்லல்

## 1.3. பிரதான செயற்பாடுகள்

**அம்பாறை மாவட்ட செயலக கடமைகளும் பொறுப்புக்களும்**

- அலுவலக நிருவாக நடவடிக்கைகள்
- நிருவாக பொறுப்புக்கள், நிருவாக விடுமுறை மற்றும் புகையிரத பயணச்சீட்டு
- பிரதேச செயலகங்களின் நிருவாக நடவடிக்கைகளும் கண்காணிப்பு நடவடிக்கைகளும்
- கிராம செயலகங்களில் நிருவாக நடவடிக்கைகளும் கண்காணிப்பு நடவடிக்கைகளும்
- நெற் கொள்வனவு தொடர்பான நடவடிக்கைகள்

**மாவட்ட செயலக நிதிப் பிரிவின் கடமைப்பாங்கு**

- மாவட்டத்திலுள்ள சகல மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகளுக்கிடையில் நிதி ஒதுக்கீடு மற்றும் கட்டு நிதிகளை பகிர்ந்தளித்தல்.
- மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் தொடர்பான கணக்கறிக்கைகளை தயாரித்தல் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிக்கையிடல்.
- மாவட்ட செயலகத்திலுள்ள சகல கொடுப்பனவுப் பணிகள்.

**மாவட்ட செயலக நிருவாக மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவின் கடமைகளும் பொறுப்புக்களும்**

- அலுவலக நிருவாக நடவடிக்கைகள்
- சமூக சேவை நடவடிக்கைகள்
- கலாச்சார மற்றும் மத நடவடிக்கைகள்
- மனித வள அபிவிருத்தி மற்றும் வினைத்திறன் அபிவிருத்தி பயிற்சி நடவடிக்கைகள் பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவாளர் மற்றும் திடீர் மரண விசாரணையாளர்களை நியமிப்பு செய்வது தொடர்பான நடவடிக்கை.
- ஜுரிமார்களின் பெயர் அட்டவணையை தயாரித்து நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.
- மாவட்ட மட்டத்தில் தேசிய நிகழ்வுகள் மற்றும் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை ஒழுங்கமைத்தல்.
- பொதுமக்கள் தொடர்பிலான முறைப்பாட்டு நடவடிக்கைகள்.
- தேவையேற்படும் சந்தர்ப்பத்தில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை மக்களுக்கு வழங்குதல்.
- அனர்த்தம் மற்றும் சுனாமி மீள்கட்டமைப்பு நடவடிக்கைகள.
- சுடுகலன் மற்றும் வெடி பொருட்களுக்கான அனுமதிப்பத்திர நடவடிக்கைகள்
- சுற்றுலா விடுதி தொடர்பான நடவடிக்கைகள்

## 1.4 அம்பாறை மாவட்ட செயலகத்தினுடைய ஒழுங்கமைப்பு அட்டவணை



## 1.5மாவட்ட செயலகம் மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்கள்

அம்பாறை நகர மையத்தில் இருந்து ஒரு கிலோமீற்றர் வடக்கில் மாவட்ட செயலகம் அமைந்துள்ளது. மாவட்டத்தினுடைய நிருவாகத்திற்குரிய பாரிய கடமைப் பொறுப்புக்கள் இவ் அலுவலகம் மூலம் செய்யப்படுகின்றன. மாவட்ட செயலகம் அமைந்துள்ள கட்டடம் உறுதியானதும், கருங்கல்லினாலும் அமைக்கப்பட்ட பழங்காலக் கட்டடமாக இருப்பதுடன் அது கல்லோயத் திட்டத்தின் கீழே ஸ்தாபிக்கப்பட்டது. அதிகமானவர்களினால் இது அம்பாறை கச்சேரி என அழைக்கப்படுகின்றது. மாவட்ட செயலகத்தின் கீழ் 19 பிரதேச செயலகங்களும் 01 உப பிதேச செயலகமும் உள்ளன. அப்பிரதேச செயலகங்களின் **503** கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் காணப்படுகின்றன அவை பின்வருமாறு

| இல | பிரதேச செயலகம் | கி.சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | மாவட்ட செயலகத்தில் இருந்து பிரதேச செயலகத்திற்கான தூரம்(KM) |
|---|---|---|---|
| 01 | தெகியத்தக்கண்டிய | 13 | 121 |
| 02 | பதியத்தலாவ | 20 | 82 |
| 03 | மகாஓயா | 17 | 62 |
| 04 | உகண | 55 | 11 |
| 05 | அம்பாறை | 22 | - |
| 06 | தமன | 33 | 17 |
| 07 | லாஹுகல | 12 | 80 |
| 08 | பொத்துவில் | 27 | 75 |
| 09 | திருக்கோவில் | 22 | 42 |
| 10 | ஆலையடிவேம்பு | 22 | 28 |
| 11 | அக்கரைப்பற்று | 28 | 28 |
| 12 | அட்டாளைச்சேனை | 32 | 29 |
| 13 | இறக்காமம் | 12 | 10 |
| 14 | நிந்தவூர் | 25 | 26 |
| 15 | காரைதீவு | 17 | 24 |
| 16 | சாய்ந்தமருது | 17 | 25 |
| 17 | கல்முனை | 29 | 28 |
| 18 | கல்முனை வடக்கு (உபசெயலகம்) | 29 | 28 |
| 19 | நாவிதன்வெளி | 20 | 24 |
| 20 | சம்மாந்துறை | 51 | 20 |

## 1.6 *அமைச்சு / திணைக்களம் நிறுவனங்கள் கீழுள்ள சபையின் மாகாண /நிதியங்கள்*

இந்த கச்சேரி வளவினுள் பல்வேறுபட்ட திணைக்களகங்களின் அலுவலகங்கள் மற்றும் பல்வேறுபட்ட பிரிவுகளும் காணப்படுகின்றன அவையாவன,

| | |
|---|---|
| 1. | மாவட்ட சமூர்த்தி அலுவலகம் |
| 2. | உதவிதேர்தல் ஆணையாளர் அலுவலகம் |
| 3. | மாவட்ட வாகனப் போக்குவரத்து அலுவலகம் |
| 4. | மாவட்ட அளவை, நிறுவை மற்றும் சேவைகள் திணைக்கள அலுவலகம் |
| 5. | மாவட்ட புள்ளிவிபரவியல் பிரிவு |
| 6. | அனர்த்த முகாமைத்துவ பிரிவு |
| 7. | மாவட்ட விளையாட்டு பிரிவு |
| 8. | பிரதி காணி ஆணையாளர் அலுவலகம் |
| 9. | மாவட்ட காணி சீரமைப்பு சபை |
| 10. | மாவட்ட சமூகப் பாதுகாப்பு சபை |
| 11. | உதவி காணியாளர் அலுவலகம் (மாகாணம்) |
| 12. | மாவட்ட காணி பயன்பாட்டு மற்றும் திட்டமிடல் திணைக்கள அலுவலகம் |
| 13. | மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகம் |
| 14. | விவசாயத் திணைக்களத்தின் விதை உறுதிப்படுத்தும் அலுவலகம் |
| 15. | ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் கிழக்கு மாகாண அலுவலகம் |

## 1.7 வெளிநாட்டு நிதியீட்டத்திலான விபரங்கள்

**NIL**

## 02. அத்தியாயம்

## 02 . முன்னேற்றம், சிறப்பு அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

### 2025 ஆண்டின் சாதனைகள்

**மாவட்டத்தின் அபிவிருத்தி செயற்பாடுகள்**

"வளமான நாடு – அழகிய வாழ்க்கை" கொள்கை பிரகடணம் மூலம் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் உற்பத்திப் பொருளாதாரமொன்றை கட்டியெழுப்பும் தீர்க்கமான மற்றும் முக்கிய பணியொன்றாக அடையாளங்கண்டு 2025 ஆண்டிற்குள் செயற்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி வேலைத்திட்டங்களாக "பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் (DCB) வேலைத்திட்டம் மற்றும் மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தைக்" குறிப்பிட முடியும். விவசாயம், கால்நடை மற்றும் மீன்பிடிக் கைத்தொழிலைக் கட்டியெழுப்புதல், கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, முயற்சியாண்மை அபிவிருத்தி, தேசிய உற்பத்திக் கைத்தொழில் மேம்படுத்தல், சுற்றலாக் கைத்தொழிலுக்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்தல் போன்றே உற்பத்தி பொருளாதாரமொன்றின் பொருட்டு தேவையான பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி போன்ற 08 அபிவிருத்தி துறைகளின் கீழ் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை செயற்படுத்தப்பட்டது.

இவ் வேலைத்திட்டத்தின் கீழ் உற்பத்திப் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்து வறுமையில் வாழ்கின்ற மக்கள் உற்பத்திப் பணியிற்கு பங்களிப்புச் செய்தல் மற்றும் அம் மக்களின் வருமான மட்டத்தை உயர்த்துதல் மூலமாக வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் எதிர்பார்த்து பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் மற்றும் மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டம் மாவட்டத்தின் சகல பிரதேச செயலகப் பிரிவுகளைப் போன்றே கல்முனை வடக்கு உப பிரதேச செயலகப் பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், வருடத்தில் இரண்டாவது காலாண்டிற்குள் காணப்பட்ட உள்ளூராட்சி தேர்தல் போன்றே வருடத்தின் இறுதி மாதங்கள் சிலவற்றிற்குள் காணப்பட்ட அசாதாரண காலநிலை நிலமை காரணமாக உரிய முறையில் செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு மற்றும் முடிப்பதற்கு தாக்கங்கள் ஏற்பட்ட போதிலும் மாவட்ட செயலகதின் வழிகாட்டலுக்கு அமைய பெரும்பாலான அனுமதிக்கப்பட்ட செயற்திட்டங்கள் உரிய கால எல்லைக்குள் வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு பிரதேச செயலகங்களுக்கு முடியுமானது. மேலும் அசாதாரண காலநிலை நிலமை காரணமாக சில செயற்திட்டங்களை முடிவுறுத்தி கொடுப்பனவு செய்வதற்கு போதியளவு காலம் இன்மை காரணமாக அதற்கு 2026 ஆண்டிற்கு ஒதுக்கீடுகள் கோரப்பட்டு, இதுவரையில் உரிய அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 80 மி.ரூபா ஒதுக்கீட்டின் மூலம் 54 செயற்திட்டங்கள் மற்றும் மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் கீழ் 59.0 மி.ரூபா ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி 45 அபிவிருத்தி செயற்திட்டங்களை வெற்றிகரமாக முடிப்பதற்கு முடியுமானது.

மேலும், போக்குவரத்து மற்றும் சிவில் சேவை அமைச்சின் ஒருங்கிணைப்பினால் மாவட்டத்தில் முன்னுரிமைப்படுத்தப்பட்டு இனங் காணப்பட்ட வீதி அபிவிருத்தி செயற்திட்டம் 02 கட்டத்தின் கீழ் 585.65 மி.ரூ. செலவு செய்து 231 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் மற்றும் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகப் பிரிவில் வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு முடியுமானதுடன் இதன் போது பிரதானமாக உற்பத்திப் பொருளாதாரத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யும் அரசின் எதிர்பார்ப்புக்களை உயர்த்துவதாகும்.

**அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் – 2025 ( 2025.12.31 திகதிக்கு)**

| # | செயற்திட்டத்தின் பெயர் | 2024 ஆண்டிற்கு மொத்த ஒதுக்கீடு (மி.ரூ.) | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | மொத்த செலவு (மி.ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட வேலைத்திட்டம் 237-01-02-01-2509 | 80.00 | 54 | 78.315 |
| 2 | மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டம் 270-01-01-014-2509-00-11 | 59.00 | 45 | 57.853 |
| 3 | கிராமிய வீதி அபிவிருத்தி வேலைத்திட்டம் - 01 கட்டம் | 280.84 | 104 | 270.49 |
| 4 | கிராமிய வீதி அபிவிருத்தி வேலைத்திட்டம் - 02 கட்டம் | 304.81 | 127 | 279.14 |
| 5 | மதத் தளங்கள் அபிவிருத்தி வேலைத்திட்டம் | 42.364 | 58 | 40.489 |
| 6 | பாடசாலை விளையாட்டு மைதான அபிவிருத்தி வேலைத்திட்டம் | 10.301 | 7 | 10.177 |
| 7 | ஒருங்கிணைந்த வீதி அபிவிருத்தி வேலைத்திட்டம் | 48.024 | 12 | 46.705 |
| 8 | மீளக் குடியமர்த்தும் வீடமைப்பு செயற்திட்டம்(0.9 மி.ரூ.) | 229.0707 | 92 | 228.879 |
| 9 | மீளக் குடியமர்த்தும் வீடமைப்பு செயற்திட்டம் (1.5 மி.ரூ.) | | 97 | |
| 10 | மீளக் குடியமர்த்தும் செயற்திட்டம் - மின் இணைப்புக்களை வழங்குதல். | 98.77125 | 358 | 96.293 |
| 11 | மீளக் குடியமர்த்தும் செயற்திட்டம் - நீர் இணைப்புக்களை வழங்குதல் | | 273 | |
| 12 | மீளக் குடியமர்த்தும் செயற்திட்டம் - வீதி அபிவிருத்தி | | 31 | |
| 13 | நீலக் கொடி செயற்திட்டம் (Blue Flag project) | 9.951 | 8 | 9.492 |
| 14 | சுத்தமான இலங்கை வேலைத்திட்டம் (Clean Sri Lanka programme) | 3.518 | 8 | 1.845 |
| 15 | அனர்த்த முகாமைத்துவ செயற்திட்டம் | 9.14 | 3 | 8.677 |
| 16 | சுகாதார வசதிகளை மேம்படுத்தும் வேலைத்திட்டம் (SACOSAN) | 7.65 | 17 | 7.403 |
| **மொத்தம்** | | **1,183.44** | **1,294.00** | **1,135.76** |

**அம்பாறை மாவட்டத்திற்கு அண்மைக் காலத்தில் தாக்கம் செலுத்திய திட்வா (Ditwa) சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி வழங்குதல் - 2025**

அண்மைக் காலத்தில் அம்பாறை மாவட்டத்தில் வெள்ள நிலமை காரணமாக பாதிக்கப்பட்ட 7520 குடும்பங்களை இனங் காணப்பட்டதுடன், அதன் போது அதிக அனர்த்த நிலமை அறிக்கை செய்த தெஹியத்தகண்டி பிரதேச செயலகப் பிரிவில் அனர்ததத்திற்கு இலக்கான குடும்பங்களின் எண்ணிக்கை 731 ஆவதுடன் அவர்கள் 05 அனர்த்த நிலையங்களில் தங்கியிருந்தனர். அரசினால் தேசிய மட்டத்தில் விசேட உதவிகள் வழங்கும் வேலைத்திட்டத்தை செயற்படுத்தப்பட்ட அம்பாறை மாவட்டத்திற்குள் பல்வேறு துறைகளின் கீழ் அனர்த்தத்திற்கு உள்ளானவர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்குதல் கீழே குறிப்பிட்ட வகையில் செயற்படுத்தப்பட்டது.

| தொ.இல. | நட்டஈடு செலுத்தும் துறை | பயனாளிகளின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட தொகை (மி.ரூ.) |
|---|---|---|---|
| 1 | வீடு சுத்தம் செய்யும் கொடுப்பனவு | 1,831 | 45.78 |
| 2 | வீட்டு உபகரணங்கள் வழங்குதல் | 383 | 19.15 |
| 3 | வீட்டு வாடகைக் கொடுப்பனவு | 93 | 2.33 |
| 4 | பாடசாலைப் பிள்ளைகளுக்கு கொடுப்பனவு | 407 | 6.11 |
| 5 | நெல் விவசாயப் பாதிப்புக்களுக்கு உதவி | 3,308 | 295.56 |
| | | **6,022** | **368.93** |

மேலும், அனர்த்தத்திற்கு உள்ளான பிரதேசத்தில் பெருந்தெருக்கல், பாலம், மதகு 149 இற்கு அண்மித்த அளவில் மற்றும் நீர்ப்பாசன முறைமை பாதிப்படைவதற்கு குறித்த 402 அபிவிருத்தி செயற்திட்டங்கள் இதுவரை இனங் காணப்பட்டுள்ளதுடன், வடிகாலமைப்பு மற்றும் மின் இணைப்புக்கள் மீண்டும் இற்றைப்படுத்துவதற்கு பொறுப்பேற்க நேரிடும் என எதிர்பார்க்கின்ற செலவு 477.63 மி.ரூ ஆகும். அத்துடன் விவசாய, மீன்பிடி கைத்தொழில் மற்றும் கால்நடைகள் பாதிப்படைதல் கவனத்தில் கொள்ளத்தக்க அளவு இந்த அனர்த்த நிலமை காரணமாக அறிக்கை செய்யப்பட்டதுடன், இந் நிலமையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அரசினால் 2026 ஆண்டில் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**2025 ஆண்டில் முகங்கொடுத்த சவால்கள்**

2025 ஆண்டில் இலக்குகளை பூர்த்தி செய்யும் போது கீழே குறிப்பிட்ட சவால்களுக்கு மாவட்ட செயலகம் முகங்கொடுத்ததுடன், அச் சவால்களை வெற்றிகரமாக முகாமைத்துவம் செய்வதற்கு முடிந்தது.

1. வருட ஆரம்ப காலாண்டில் உள்ளூராட்சி நிறுவன தேர்தல் நடத்துதல் காரணமாக செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது தாமதங்கள் இடம்பெற்றதுடன், திட்வா சூறாவளியுடன் ஏற்பட்ட வெள்ள நிலமை போன்ற பாதகமான காலநிலை நிலமைகளும் இடம்பெற்றது.
2. வெள்ள நிலமைக்குள், மாவட்ட மக்களின் வருமான மட்டம் குறைதல் மற்றும் தமது நாளாந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போசாக்குள்ள உணவுகளைப் பெற்றுக் கொள்ளல் சிரமம் போன்ற பல சிரமங்களுக்கு முகங் கொடுத்தனர் இதனால் அவ் உதவியற்ற மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கு பிரதேச செயலகம் போன்றே வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்களுடன் நெருக்கமான ஒருங்கிணைப்புச் செய்வதற்கு மாவட்ட செயலகத்திற்கு நேர்ந்தது.

**2026 ஆண்டிற்கு திட்டமிடல்**

மாவட்ட மக்களின் உணவு பாதுகாப்பு மற்றும் போசாக்கினை உறுதி செய்தல், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்த நிலமைகளின் போது உள்ளாகின்ற சிரமங்களை இல்லாதொழிப்பதற்குத் தேவையான உதவியை வழங்குதல் மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு வசதியான வருமான மட்டத்தை அடைந்து கொள்வதற்கு உதவி வழங்குதலை நோக்காகக் கொண்டு கீழே குறிப்பிட்ட திட்டங்களை 2026 ஆண்டில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கமைய 2026 ஆண்டில் மாவட்ட செயலகத்தின் மொத்த நோக்கமாவது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வதுடன் பிரதேச மக்களின் நல்வாழ்வை உறுதி செய்தல் ஆகும்.

1. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் சுமார் 100 மி.ரூ. ஒதுக்கீடுகளை ஈடுபடுத்தி உற்பத்திப் பொருளாதார இலக்காகக் கொண்ட செயற்திட்டங்களை சகல பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் செயற்படுத்துதல்.
2. கிராமிய வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் 250 மி.ரூ. ஒதுக்கீட்டை ஈடுபடுத்தி மாவட்டத்தின் சகல பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கும் வகையில் கிராமிய வீதி அபிவிருத்தி செய்தல்.
3. பிரஜாசக்தி தேசிய திட்டத்தின் கீழ் 776.7 மி.ரூ. ஒதுக்கீட்டின் ஊடாக சமூக அபிவிருத்தி சபை ஊடாக அடையாளங் காணப்பட்ட பல்வேறு துறைகளின் செயற்திட்டங்களைச் செயற்படுத்தல்.
4. கிராமிய வாழ்வாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு விவசாய அமைச்சின் ஒதுக்கீட்டின் அடிப்படையில் வணிக ரீதியான கால்நடை வளர்ப்பு செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தல். .

5. Clean Sri Lanka வேலைத்திட்டத்தின் கீழ் பல்வேறு சுற்றாடல், சமூக மற்றும் நெறிமுறைகள் நிறைய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் செயற்படுத்துதல்
6. போசாக்கான உணவுகளைப் பெற்றுக் கொள்ளும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ள மக்களின் நாளாந்த போசாக்கு தேவைகளை வழங்குவதற்கு உணவு பாதுகாப்பு மற்றும் போசாக்கு வேலைத்திட்டங்கள் 2026 ஆண்டில் மேலும் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
7. சுற்றுலா கைத்தொழிலை இலக்காகக் கொண்டு பல்வேறு அபிவிருத்தி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் (பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவிற்குள் 70 மி.ரூ. ஒதுக்கீட்டின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற Sunset view park செயற்திட்டம்)
8. யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்களுக்கு மீளக் குடியமர்த்தும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
9. விவசாய துறையின் மாவட்ட பங்களிப்பினை உயர்த்துவதற்கு நவீன விவசாய தொழிநுட்பத்தை பயன்படுத்தி விவசாய நவீனமயமாக்கல் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
10. அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் செயற்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டங்கள் மூலம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள், பெண்கள் மற்றும் இளைஞர் சமூகத்தை வலுவூட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
11. விவசாயிகளின் அறுவடையை பாதுகாக்கும் நோக்கம் மற்றும் மனித உயிர்கள் போன்றே காட்டு யானைகளின் உயிர்களையும் பாதுகாக்கும் நோக்கில் காணப்படுகின்ற மின்சார வேலிகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
12. மாவட்டத்தின் சுகாதாரத் துறையின் தரத்தினை உயர்த்துவதற்கும் மற்றும் கல்வி வசதிகளை உயர்த்துவதற்கும் பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
13. முன்தெனியாறு செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குத் தேவையான சகல ஒத்துழைப்புக்களை வழங்குதல்.
14. கல்லோயா ஆற்றின் மறுசீரமைப்பு விடயங்கள் மேற்கொள்வதற்கு நீர்ப்பாசன திணைக்களத்திற்குத் தேவையான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்குதல்.
15. அஸ்வெசும சமூக நலனோம்பல் வேலைத்திட்டங்களை மாவட்டத்திற்குள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தல்.

சின்தக அபேவிக்ரம,
அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்,
அம்பாறை மாவட்டம்

# 03. 2025 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

## 03.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

ஏசீஏ- எப்

2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2025 | | குறிப்பு | உண்மை நிலை 2025 | உண்மை நிலை 2024 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | ஏசீஏ-1 |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 6,778,708,564 | 6,327,349,004 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 659,249,159 | 642,099,517 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 103,799,670 | 100,377,774 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **7,541,757,393** | 7,069,826,295 | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **7,541,757,393** | 7,069,826,295 | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | **70,692,497** | **14,481,291** | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | | **7,471,064,896** | **7,055,345,004** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | | - | |
| 2,347,680,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 2,326,469,064 | 1,918,341,612 | ஏசீஏ-2(ii) |
| 277,800,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 229,522,925 | 235,102,891 | ஏசீஏ-2(ii) |
| 5,200,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 2,869,444 | 540,732,863 | ஏசீஏ-2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | | - | ஏசீஏ-2(ii) |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | | 440,400 | ஏசீஏ-2(ii) |
| 2,630,680,000 | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **2,558,861,433** | 2,694,617,767 | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| 143,400,000 | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 129,983,984 | 44,923,894 | ஏசீஏ-2(ii) |
| 123,000,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 90,927,688 | 78,816,549 | ஏசீஏ-2(ii) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | | - | ஏசீஏ-2(ii) |
| 3,600,000 | திறன் விருத்தி | 14 | 2,846,255 | 3,182,554 | ஏசீஏ-2(ii) |
| 59,000,000 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | 57,853,917 | - | ஏசீஏ-2(ii) |
| 329,000,000 | **மொத்த மூலதனம் செலவினம் (எ)** | | **281,611,844** | 126,922,997 | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | **595,434,478** | 514,136,116 | ஏசீஏ-4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | **165,632,609** | 178,457,699 | ஏசீஏ-5 |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | | - | |
| | **மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | **761,067,087** | **692,593,815** | |
| | **மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)** | | 3,601,540,364 | 3,514,134,579 | |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | | 3,869,524,532 | 3,541,210,426 | |
| | **பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி** | | 3,869,524,532 | 3,541,210,425 | ஏசீஏ-7 |
| - | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | | - | ஏசீஏ-3 |

A.L. Mahroof
Chief Accountant
For Government Agent
Ampara - District.

1

## 3.2. நிதிநிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2025 ரூபா | 2024 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 4,186,539,150 | 10,826,185,165 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 343,288,740 | 281,216,669 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **4,529,827,890** | **11,107,401,834** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 79,916,787 | 81,659,396 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 4,186,539,150 | 10,826,185,165 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 263,371,953 | 199,557,273 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | | |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **4,529,827,890** | **11,107,401,834** |

பக்க இலக்கம் 1 முதல் 35 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்.பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 36 முதல் 76 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். 2025 ஆம் ஆண்டின் **17.12.2025 திகதியிடப்பட்ட இல 02 /2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலைமைக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.** அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் படி நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான கணக்காளர் |
| S. ஆலொக பண்டார | பெயர்: சிந்தக அபேவிக்ரம | பெயர் : அ.லெ.ம.ஹ்றூப் |
| செயலாளர் | பதவி : மாவட்ட செலாளர் | பதவி : பிரதான கணக்காளர் |
| பொதுநிர்வாகம் மற்றும் மாகணசபை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | அம்பாறை | அம்பாறை |
| திகதி :2026.02.09 | திகதி :2026.02.06 | திகதி :2026.02.06 |
| S. Alokabandara<br>Secretary<br>Ministry of Public Administration,<br>Provincial Councils and Local Government | Chinthaka Abeywickrama<br>Government Agent<br>District Secretary<br>Ampara District | A.L. Mahroof<br>Chief Accountant<br>For Government Agent<br>Ampara - District |

2

## 3.3. காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசீஏ- சீ

**2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**காசுப் பாய்ச்சல் கூற்று**

| | உண்மை | |
|---|---|---|
| | **2025** ரூபா | **2024** ரூபா |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 246,725,890 | 220,642,384 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 6,778,708,564 | 6,327,495,277 |
| முற்பணங்களை அறவிடல் | 104,778,564 | 105,380,803 |
| வைப்புக்களின் பெறுகை | 659,249,159 | 642,099,517 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **7,789,462,177** | **7,295,617,981** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடட்டுக் கொடுப்பனவுகள் | 2,550,067,189 | 2,143,127,579 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 2,869,444 | 540,732,863 |
| *மூலதனச் சொத்துகளின் புனரமைப்பு, மூலதன மாற்றங்கள், திறன் வளர்ப்பு மற்றும் பிற மூலதனச் செலவினங்கள்* | 190,684,156 | |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 4,119,491,676 | 3,832,069,078 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 70,692,497 | 14,481,291 |
| முற்பணக் கொடுப்பனவு | 169,295,049 | 124,148,057 |
| வைப்புக் கொடுப்பனவு | 595,434,478 | 514,136,116 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **7,698,534,490** | **7,168,694,984** |
| **தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ) =(அ)-(ஆ)** | **90,927,688** | **126,922,997** |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | - | - |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| *மூலதனச் சொத்துகளின் நிர்மாணம், கொள்முதல் மற்றும் இதர முதலீட்டு பெறுதல்கள்* | 90,927,688 | 126,922,997 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **90,927,688** | **126,922,997** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ) =(ஈ)-(உ)** | **(90,927,688)** | **(126,922,997)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | **(0)** | **(0)** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | - | - |
| ***கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:*** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ) =(ஏ)-(ஐ)** | - | - |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ) =(எ) +(ஒ)** | - | - |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | - |
| **டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | - | - |

A.L. Mahroof
Chief Accountant
For Government Agent
Ampara - District

### 3.4 நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

ஏசீஏ - 1

2025 டிசம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான வருமானக் கூற்று

அரசிறை கணக்கீட்டு உத்தியோத்தர்: மாவட்ட செயலாளர்

செலவின தலைப்பு இல : 270

ரூபா

| அரசிறை குறியீடு | வருமானத் தலைப்பு | குறிப்பு | வருமான மதிப்பீடு (1) | | வருமானத்தைத் திரட்டுதல் (2) | | | (3) | வருமானத்திலிருந்து மீளச்செலுத்துதல் (4) | | | (5) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மூல மதிப்பீடு | திருத்திய மதிப்பீடு | தொடர்புடைய அமைச்சினால் / திணைக்களத்தினால்திரட்டப்பட்டது | ஏனைய அமைச்சினால் / திணைக்களத்தினால்திரட்டப்பட்டது (Table 66/SA-21) | மொத்தம் | நிலுவை வருமானங்களை திரட்டுதல் | காசாக | தவறுகளைத் திருத்துதல் | மொத்தம் | 2025 இற்குரிய தேறிய வருமானம் |
| | | | 1(i) | 1(ii) | 2(i) | 2(ii) | 2(iii)=2(i)+2(ii) | (3) | 4(i) | 4(ii) | 4(iii)=4(i)+4(ii) | 5=2(iii)+(3)-4(iii) |
| | | | | | | பொருத்தமற்றது | | | | | | |
| | முழு மொத்தம் | | | | | | | | | | | |

பிரதான கணக்காளர்
அ.லெ.ம.் .றூப்
மாவட்ட செயலகம், அம்பாறை
திகதி :2026.02.06

A.L. Mahroof
Chief Accountant
For Government Agent
Ampara - District

கணக்கீட்டு உத்தியோகத்தர்
சிந்தக அபேவிக்ரம
மாவட்ட செலாளர்
அம்பாறை
திகதி : 2026.02. 06

Chinthaka Abeywickrama
Government Agent
District Secretary
Ampara District

8

# 2025 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல : 270 மாவட்டச் செயலகத்தின் பெயர் : அம்பாறை

ரூபா

| செலவினக் குறியீடு | குறிப்பு | நிதியிடல் (குறியீட்டு இல.) | ஏற்பாடுகள் | | | | செலவினம் | | | தேறிய விளைவு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | வருடாந்த வரவு செலவு ஏற்பாடு | குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு | நி.ஓ 66/69 மாற்றல்கள் | மொத்தத் தேறிய ஏற்பாடு | காசுப் புத்தகத்தின் பிரகாரம் செலவினம் | நி.ஓ. 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்களினால்/திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் (திறைசேரியின் அச்சுக் குறிப்புகளின் பிரகாரம்) | மொத்தச் செலவினம் | சேமிப்பு / மிகை | திருத்தப்பட்ட மதிப்பீட்டின் % சதவீதமாக சேமிப்பு / மிகை | வேறுபாட்டுக்கான காரணம் |
| | | | (1) | (2) | (3) (-)/+ | (4)=(1)+(2)+(3) | (5) | (6) | (7)= (5)+(6) | (8)=(4)-(7) | (9)=(8)/(4)*100 | |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | | | | | | | | | |
| நிகழ்ச்சித் திட்டம் (1) | | | | | | | | | | | | |
| நிகழ்ச்சித் திட்டம்./கருத்திட்டம்/உப கருத்திட்டம்/ குறியீடு | | | | | | | | | | | | |
| **கூலி, சம்பளம் மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் செலவு விடயரீதியான வகுப்பீடு** | 5 | | | | | | | | | | | |
| **ஆளுக்குரிய வேதனாதிகள்** | | | | | | | | | | | | |
| 1001 சம்பளமும் கூலியும் | | 11 | 1,129,000,000 | 287,680,000 | 120,000,000 | 1,536,680,000 | 1,533,063,589 | | 1,533,063,589 | 3,616,411 | 0 | சாதாரண சேமிப்பு |
| 1002 மேலதிக நேர மற்றும் ஏனைய படிகள் | | 11 | 44,500,000 | - | 11,500,000 | 36,000,000 | 55,525,828 | | 55,525,828 | 474,172 | 1 | செலவின கட்டுப்பாடு |
| 1003 ஏனைய கொடுப்பனவுகள் | | 11 | 888,000,000 | - | (133,000,000) | 755,000,000 | 731,954,847 | 5,924,800 | 737,879,647 | 17,120,353 | 2 | சாதாரண சேமிப்பு |
| **செலவு விடயரீதியான ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்** | 6 | | | | | | | | | | | |
| **பிரயாணச் செலவினம்** | | 11.00 | 24,300,000 | - | 1,500,000 | 25,800,000 | 24,452,375 | | 24,452,375 | 1,347,625 | 6 | செலவின கட்டுப்பாடு |
| 1101 உள்ளூர் | | | | | | | | | | | | |
இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு இலக்கம் 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள், அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 திசெம்பர் 17 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 02/2025 இன் பிரகாரம் அம்பாறை மாவட்ட செயலகத்தின், பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை அம்பாறை மாவட்ட செயலகம், பொதுத் திறைசேரி மற்றும் பாராளுமன்றத்தின் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 திசெம்பர் 17 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 02/2025 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அம்பாறை மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல்,தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 மீண்டெழும் செலவினங்கள்

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தினால் மீண்டெழும் செலவினத்தின் கீழ் காணப்பட்ட ரூபா 349,000 கட்டட திருத்தத்திற்கான ஒதுக்கத்தினை பயன்படுத்தி மூலதன செலவான இறாக்கை கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

### 1.6.2 நிதியல்லாத சொத்துக்கள்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன**

(அ) திரண்ட நிதியல்லாத சொத்துகள் அறிக்கையில் (SA 82) மீளாய்வாண்டில் கொள்வனவாக கூட்டு மொத்தம் ரூபா 91,048,697 வெளிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் நிதிச் செயலாற்றுகை கூற்றில் ரூபா 121,009 குறைத்து ரூபா 90,927,688 வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ம் திகதி சொத்து குறியீட்டு இலக்கம் 9152 இன் கீழ் இயந்திரங்களின் இறுதி பெறுமதி ரூபா 731,896,180 வெளிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் திறைசேரியின் மாதாந்த பொழிப்பின் பிரகாரம் (SA 80) ரூபா 728,305,754 வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவாக மீளாய்வாண்டில் நிதியல்லா சொத்துக்கள் ரூபா 3,590,426 பெறுமதியினால் குறைத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) 2025 திசெம்பர் 17 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இல 02/2025 பந்தி 3 இன் பிரிவு 3.2 இன் பிரகாரம் அறிக்கையிடல் நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள புள்ளிவிபரங்களை திறைசேரியின் இறுதிக் கணக்குக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானம், செலவினம் மற்றும் பிரதான பேரேட்டு நிலுவைகள் என்பவற்றுடன் உடன்படுகின்றது என்பதை சான்றுபடுத்துதல் வேண்டும். மேலும் நிதியல்லாத சொத்துக்கள், வைப்புக்கள், முற்பணக் கணக்குகள் மற்றும் ஏனைய தொடர்புடைய பிரதான பேரேட்டுக் கணக்குகளின் கணக்கு நிலுவைகளை உரிய கட்டுபாட்டு பேரேட்டு நிலுவைகளுக்கு சமமானது என்பதை சான்றுப்படுத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் மிளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி ரூபா 4,186,539,150 ஆகவும் திறைசேரி குறிப்பின் பிரகாரம் நிதியல்லா சொத்து ரூபா 4,190,129,574 ஆகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) சொத்து குறியீட்டு இலக்கம் 9152 இன் கீழ் மீளாய்வாண்டில் சிகாஸ் மென் பொருள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட பிரதேச செயலகங்களுக்கான நிதியல்லா சொத்துக்களின பெறுமதி ரூபா 170,909,086 ஆக காணப்படுவதுடன் மாவட்ட செயலகம், கல்முனை மற்றும் அக்கரைப்பற்று பிரதேச செயலகங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட சொத்து (Create File) பிரகாரம் ரூபா 155,175,184 ஆகவும் காணப்படுவதனால் இரண்டு மீதிகளுக்குமிடையில் ரூபா 15,743,902 வேறுபாடு காணப்படுகின்றமை அவதானிக்க முடிந்தது.

(உ) பொத்துவில் பிரதேச செயலக கட்டிடத்தின் பெறுமதி ரூபா 3,000,000 முறையாக உரிய உருப்படியின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்க முடிந்தது.

(ஊ) கடந்த ஆண்டிற்கான 9151, 9152 மற்றும் 9153 ஆகிய சொத்துக் குறியீட்டு இலக்கங்களுக்கான திறைசேரியின் திரண்ட நிதியல்லா சொத்துக்களின் இறுதி மீதியாக ரூபா 10,300,563,167 காணப்பட்ட போதிலும் இறுதி மீதிக்கும் மீளாய்வாண்டின் திறைசேரியின் திரண்ட நிதியல்லா சொத்துக்களின் ஆரம்ப மீதிக்குமிடையில் ரூபா 6,341,668,427 வேறுபாடு காணப்படுகின்றமை அவதானிக்க முடிந்தது.

(எ) பிரதேச செயலகங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட சொத்து அகற்றல் தகவல்களின்படி மீளாய்வாண்டில ரூபா 65,471,423 பெறுமதியான சொத்துக்கள் அகற்றப்பட்டுள்ள போதிலும் உரிய தொகை திறைசேரியின் திரண்ட நிதியல்லா சொத்துகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான மகளீர் அபிவிருத்தி நிலையம் மற்றும் முகாமைத்துவ பயிற்சி நிலையத்தின் காணி, கட்டிடங்கள் மற்றும் இருப்பு பொருட்களின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) தமன, அட்டாளைச்சேனை, மற்றும் திருக்கோவில் ஆகிய பிரதேச செயலகங்களுக்கான காணிகளும், பதியத்தலாவ, தமன, பொத்துவில் மற்றும் லாகுகல பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் அரச விடுதிகள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த, 15 பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய நிலசெவன கட்டிடங்களின் பெறுமதி மற்றும் மீளாய்வாண்டில் திருத்தம், புனர்நிர்மாணம் மேற்கொள்ளப்பட்ட நிலசெவன மற்றும் செவபியச ஆகியவற்றிற்கான ரூபா 87,423,093 செலவினை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3 வாடகை, பணி முற்பணம் மற்றும் வாடகை, பணி முற்பண ஒதுக்க கணக்கு

அம்பாறை மாவட்ட செயலகத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற புதிய கட்டிடத்தின் ஐந்தாம் கட்ட வேலைத்திட்டத்திற்காக வழங்கப்பட்ட தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 10,532,235 நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.6.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டில் மூலதன சொத்து கொள்வனவாக ரூபா 90,927,688 நிதிச் செயலாற்றுகை கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் இவற்றை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

அம்பாறை மாவட்ட செயலகத்தினால் நிதி ஒழுங்குவிதி 454(2) இன் பிரகாரம் மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) கணக்காய்வுக்காக சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் கீழே குறிப்பிடப்படும் கணக்காய்வு பரிந்துரையின் பிரகாரம் முன்னைய ஆண்டு நிதிக் கூற்றுடன் இணங்கமின்றி காணப்பட்டது.

| கணக்காய்வு பரிந்துரை | இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|
| கடந்த ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதி திறைசேரியின் திரண்ட நிதியல்லா 3 சொத்துக்களின் இறுதி மீதி ரூபா 10,300,563,167 மீளாய்வாண்டின் திறைசேரியின் திரண்ட நிதியல்லா சொத்துக்களின் ஆரம்ப மீதிக்குமிடையில் ரூபா 6,341,668,427 வேறுபாடு காணப்படுகின்றமை அவதானிக்க முடிந்தது. | 1.6.2 (ஊ ) |

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **முன்னைய ஆண்டின் அறிக்கைக்கான தொடர்பு** | **செயற்படுத்தப்படாத பரிந்துரை** | **இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு** |
|---|---|---|
| 1.5.3 (அ) | மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான மகளீர் அபிவிருத்தி நிலையம் மற்றும் முகாமைத்துவ பயிற்சி நிலையத்தின் காணி, கட்டிடங்கள் மற்றும் இருப்பு பொருட்களின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. | 1.6.2 (ஏ) |
| 1.5.3 (ஆ) | தமன, அட்டாளைச்சேனை, திருக்கோவில் ஆகிய பிரதேச செயலகங்களுக்கான காணி மற்றும் பதியதலாவ, தமன பிரதேச செயலகங்களுக்கான உத்தியோகபூர்வ இல்லம், அரசாங்க விடுதிகள் என்பன மதீப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | 1.6.2 (ஐ) |
| 1.5.3 (இ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த, பதினைந்து பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய உத்தியோகபூர்வ தங்குமிட கட்டிடங்களின் ரூபா 46,422,256 பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1.6.2 (ஒ) |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 செலவு முகாமைத்துவம்

மீளாய்வாண்டில் வேறு அமைச்சுக்கள் மற்றும் 6 திணைக்களங்களிடமிருந்து மாவட்ட செயலகத்திற்கு கிடைக்கப்பபெற்ற ரூபா 217,462,270 ஒதுக்கத்தில் 2 அமைச்சுக்களுக்கான ரூபா 4,850,000 ஒதுக்கம் பயன்படுத்தப்படாததுடன் மீதி ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 55 வீதம் தொடக்கம் 73 வீதம் வரையான ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துதல்

**கீழே குறிப்பிடப்படும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன**

**(அ)** கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் 2025 யூலை 25 ஆம் திகதிய 03/2025 இலக்கமுடைய சுற்றுநிரூபத்தின் பந்தி 2 இன் பிரகாரம் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித் தொகையினை பெற்றுக் கொள்வதற்கு பயனாளிகளை தெரிவு செய்யும் போது குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு

ஏற்ப ஒருவருக்கான மாதாந்த வருமானம் ரூபா 16,191 இற்கு குறைவாக காணப்படும் பயனாளிகளை தெரிவு செய்ய வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அதற்கு முரணாக ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தினால் 13 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு உரிய நன்மை வழங்கப்படுகின்றது.

(ஆ) ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் 2019 ஜுன் 24 ஆம் திகதிய 1/3/2015/NSPD(ii) ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 10 வது பிரிவின் பிரகாரம் அங்கவீன கொடுப்பனவினை பெறும் பயனாளி மரணமடைந்தால் உடனடியாக அவருக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகள் நிறுத்தப்படவேண்டிய போதிலும் இறக்காமம் -5 கிராமசேவகர் பிரிவில் அங்கவீன கொடுப்பனவு பெற்றுவந்த பயனாளி மரணமடைந்த பின்னர் இரண்டு மாதங்களுக்கான கொடுப்பனவு ரூபா 20,000 வழங்கப்பட்டுள்ளதனை அவதானிக்க முடிந்தது.

(இ) சமூக நலன்புரி மற்றும் ஆரம்ப கைத்தொழில் அமைச்சின் 2018 ஒக்டோபர் 15 ஆம் திகதிய MSW/EL/01/2018 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 2 வது பிரிவின் 2.6 இன் பிரகாரம் உதவித் தொகை பெற்றுவந்த பயனாளி மரணமடைந்தால் உடனடியாக அவருக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகள் நிறுத்தப்படவேண்டிய போதிலும் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் கீழ் முதியோர் கொடுப்பனவு பெற்றுவந்த 4 பயனாளிகள் மரணமடைந்ததன் பின்னர் ரூபா 47,000 மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளதனை அவதானிக்க முடிந்தது.

(ஈ) கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின முதியோர் கொடுப்பனவு தொடர்பாக முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் 2025 மார்ச் 12 ஆம் திகதிய NSE/DEV/03/01 இலக்க கடிதத்தின் பிரகாரம் அஸ்வெசும பயனாளிகளாயின் அவர்களது அஸ்வெசும கணக்கினூடாக அவர்களது முதியோர் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதுடன் இவ்வாறு அஸ்வெசும கணக்கினூடாக முதியோர் கொடுப்பனவுகள் பெறுகின்றவர்களின் பெயர் நீக்கப்பட்டு அஸ்வெசும பயனாளி அல்லாத முதியோர்களுக்கான முதியோர் கொடுப்பனவு மாத்திரம் வழமை போன்று தபால் அலுவலகம் ஊடாக வழங்கப்பட வேண்டிய போதிலும் 5 பிரதேச செயலகங்களினால் 72 பயனாளிகளுக்கு கூட்டு மொத்தம் ரூபா 994,000 கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதுடன் உரிய தொகையினை மீள அறவிடு செய்து உரிய அமைச்சுக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதி, பொருளாதார, உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் இயங்குகின்ற நலன்புரி நன்மைகள் சபையினால் 2023 ஜுலை 13 ஆம் திகதி வெளியிடப்பட்ட MF/WBB/02Notice/D/DIV/2022 இலக்க கடிதத்தின் பிரகாரம் அஸ்வெசும நன்மைகளை பெற தகுதியான ஒற்றை நபரைக் கொண்ட குடும்பங்களில் தனி நபர் இறந்து போனால் கிராம அலுவலர்களால் உண்மைகளை உறுதிப்படுத்தி விண்ணப்பதாரர் தொடர்பான விபரங்களை பிரதேச செயலாளரின் சிபாரிசுடன் நலன்புரி சபைக்கு தெரிவிக்க வேண்டிய போதிலும் உரிய இறந்த பயனாளிகளின் தரவுகள் நலன்புரி நன்மைகள் சபைக்கு தெரிவித்து உரிய கொடுப்பனவை உரிய காலத்தில் இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை காரணமாக 4 செயலகங்களினால உரிய தனிநபர்களின் வங்கிக் கணக்குகளிற்கு கூட்டுமொத்தம் ரூபா 1,357,500 தொகை 32 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்க முடிந்தது.

(ஊ) இரண்டு பிரதேச செயலகங்களினால் ஓய்வூதியதாரர்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவின் போது அவர்களது தரவுத்தளத்தில் மரணமடைந்த மற்றும் இரண்டாவது திருமணம் செய்து கொண்ட ஓய்வூதியதாரர்களின் தகவல்கள் நாளதுவரையாக மேற்கொள்ளப்படாமை காரணமாக 31 ஓய்வூதியதாரர்களுக்கு ரூபா 6,796,799 மேலதிகமாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(எ) பாணம சமுர்த்தி வங்கிப்பிரிவில் காணப்பட்ட 07 கிராம சேவகர் பிரிவிற்குரிய சமுர்த்தி பயனாளிகள் வேறாகப் பிரிக்கப்பட்டு 2022 ஒக்டோபர் 12 ஆம் திகதி லாகுகல சமுர்த்தி வங்கி உருவாக்கப்பட்டிருந்தது. இருப்பினும் கணக்காய்வுத் திகதி வரை உரிய வங்கியின் கீழ் உள்ள 07 கிராம சேவகர் பிரிவிலுள்ள 802 பயனாளர்களின் கட்டாய சேமிப்பு மற்றும்

வட்டித் தொகைகள் கணிப்பீடு செய்து உரிய லாகுகல வங்கிக்கு வழங்குவதற்கு மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஏ) பாணம சமுர்த்தி வங்கியினால் தயார் செய்யப்படும் பரீட்சை மீதியில் காணப்படும் 3310 தொங்கல் கணக்கு வரவு மீதி கடந்த 5 ஆண்டுகளில் அசாதரண முறையில் அதிகரித்துக் காணப்படுவதுடன் விசேடமாக 2022/2023 காலப்பகுதியில் கூட்டுமொத்தம் ரூபா 2,763,222 அதிகரிப்பு காணப்பட்டிருந்தது. இந்நடைமுறை வங்கி நிதிநிலைமையின் பாதகத் தன்மையை வெளிப்படுகின்றது. இவ் அசாதாரண அதிகரிப்பு தொகைகள் தொடர்பாக மாவட்ட சமுர்த்தி உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2017 மார்ச் 07 ஆம் திகதிய 2009/8 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானியின் அத்தியாயம் 5 இன் பிரிவு 15 (3) இன் பிரகாரம் சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பின் எல்லா நிதிகளும் இயைபான சமுதாய அடிப்படையிலான வங்கியிலுள்ள ஒரு கணக்கில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தெரிவு கணக்காய்வின் போது நிந்தவூர் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 17 சமுதாய அடிப்படை அமைப்புக்களினால் அங்கத்துவ கட்டணங்கள் மூலம் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் கணக்காய்வுத் திகதியான 2025 ஒக்டோபர் 30 ஆம் திகதி வரை சேகரிக்கப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 1,100,917 உரிய சமுதாய அடிப்படையிலான வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) பிரதேச செயலாளர், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர், மாவட்ட சமுர்த்தி உள்ளக கணக்காய்வு பிரிவு, சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள் ஆகியோரினால் சமுதாய அடிப்படை அமைப்புக்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட 2009/8 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி மற்றும் சுற்றறிக்கைகளுக்கு சமூதாய அடிப்படை அமைப்புக்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படாமை காரணமாக நிந்தவூர் பிரதேச செயலகத்தின் கீழ் காணப்படும் 17 சமூக அடிப்படை அமைப்புக்களினால் அங்கத்தவர்களுக்கு சுற்றுநிருபங்களை மீறி கூட்டுமொத்தம் ரூபா 841,610 தொகை சுழற்சி முறையில் கடன் வழங்கி மீள அறவிடப்படாமலும் மற்றும் சமுதாய அடிப்படை அமைப்பின் பொருளாளர்களின் கைகளில் காசு மீதியாக கூட்டுமொத்தம் ரூபா 259,307 காணப்படுகின்றதனை அவதானிக்கப்பட்டது.

(ஓ) கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சினால் கிராமிய அபிவிருத்தி திட்டம் - 2025 மூலம் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தினால் இரண்டு கட்டங்களின் கீழ் 11 பயனாளர்களுக்கு ரூபா 3,689,350 பெறுமதியான பசுக்கள் வழங்கப்பட்டிருந்தன. இருப்பினும் குறித்த பசுக்களுக்கு பொருத்தமான காப்புறுதி மேற்கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(ஔ) கிராமசக்தி வேலைத்திட்டத்தின் கீழ் கிராமசக்தி சங்க உறுப்பினர்களுக்கு 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட ரூபா 229,992,261 கடன் தொகையில் மிளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிவரை ரூபா 49,796,356 தொகை கடன் அறவிடப்படவேண்டி காணப்படுகின்றது.

(க) மேலே உள்ள செயற்றிட்டம் தொடர்பாக சௌபாக்கியா அபிவிருத்தி நிறுவனத்தினால் 2022 யூன் 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட SDB/SPV/GS/2022/1 சுற்றுநிருபத்தின் பிரகாரம் செயலில் உள்ள கிராமசக்தி சங்கங்களில் காணப்படும் நிதியை பயன்படுத்தி நுண்கடன் திட்டங்கள் தொடர்பான அத்தியாவசிய தேவைகளை விருத்தி செய்தல் மற்றும் வேறு திட்டங்களை கண்டறிந்து அமுல்படுத்துதல் போன்ற வேலைத்திட்டங்கள் அம்பாரை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 168 சங்கங்களில் செயலில் உள்ள 127 சங்கங்கள் சுற்று நிருபத்தின் பிரகாரம் தங்களது வங்கி கணக்குகளில் காணப்படும் ரூபா 29,139,077 நிதியினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மற்றும் பதிவு செய்யப்பட்டு மொத்த சங்கங்களில் 41 சங்கங்கள் செயலிழந்து காணப்படுவதுடன் அவர்களின் கணக்குகளில் உறுப்பினர்களின் மற்றும் அரசாங்கத்தின் நிதி உள்ளடங்கலாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,883,034 நிதி பயன்பாடற்று காணப்படுகின்றது.

### 3.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக இலகுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டிய போதிலும், அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதாக கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படடிருக்கவில்லை.

### 3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | |
| (i) அத்தியாயம் XXIV பிரிவு 04 | அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு சுருக்கத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதிவரை சேவையில் இருந்து விலகியவர்கள், இடைநிறுத்தப்பட்டவர்கள், நோய்வாய்பட்டவர்கள் மற்றும் ஓய்வூதியம் பெற்ற 19 பேரின் 1 வருடம் தொடக்கம் 10 வருடம் வரையான கடன் நிலுவை ரூபா 2,268,622 அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி | |
| (i) நிதி ஒழுங்குவிதி 156 | திருக்கோவில் மற்றும் லாகுகல பிரதேச செயலகப்பிரிவில் காணப்படும் நுகர்வுப் பொருட்கள் பதிவுப் புத்தகத்துடன் தொடர்புடைய ஆவணங்களை இற்றைப்படுத்தி பௌதீக பரீசிலினை செய்த போது திருக்கோவில் பிரதேச செயலகத்தில் 36 வகையான பொருட்களும் மற்றும் லாகுகல பிரதேச செயலகத்தில் 39 வகையான பொருட்களும் குறைவாக காணப்பட்டதுடன் அதன் கொள்வனவு பெறுமதி ரூபா 288,315 வினை விடயங்களோடு தொடர்புடைய உத்தியோகதர்களிடமிருந்து அறவீடு |

| | | |
|---|---|---|
| | | செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதி ஒழுங்குவிதி 385 (அ) | வங்கி கணக்கு நடைமுறையில் உள்ள போது ரூபா 500 அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியுடைய எந்தவொரு கொடுப்பனவும் காசோலை மூலம் வழங்கப்பட வேண்டும் எனினும் இறக்காமம் பிரதேச செயலகத்தினால் மொழிப் பயிற்சி வளவாளருக்கு ரூபா 80,000 காசாக வழங்கப்பட்டுள்ளது. |

(இ) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| (i) | பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 2009/09 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.iv ஆம் பிரிவு | அலுவலகத்திற்கு உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவுகள் கைவிரல் அடையாளப்பதிவின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் அலுவலர்களுக்கான விடுமுறை நாள் கொடுப்பனவு, மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகளின் போது கைவிரல் அடையாளப்பதிவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் உகன, தமண மற்றும் நாவிதன்வெளி ஆகிய 3 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் 19 உத்தியோகத்தர்களுக்கு உள்வருகை மற்றும் வெளிச்செல்லலின் போதான கைவிரல் அடையாள இயந்திரத பதிவினை கவனத்தில் கொள்ளாது சம்பளம் மற்றும் விடுமுறைநாள் கொடுப்பனவாக ரூபா 9,181,543 செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 09/2009 இன் பிரிவு (V) | தமண பிரதேச செயலகத்தில் கடமைபுரியும் கிராம சேவகர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தருக்கு கைவிரல் அடையாளப்பதிவு மற்றும் நகர்வுப் பதிவேடுகளின் உறுதிப்படுத்தல்கள் இன்றி வாகன ஓட்டப் பதிவேட்டின் மூலம் மாத்திரம் உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் உறுதிப்படுத்தப்பட்டு விடுமுறைநாள் சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூபா 781,803 செலுத்தப்பட்டுள்ளது. |

(ஈ) 2024 ஆம் ஆண்டுக்கான பெறுகை வழிகாட்டி மற்றும் கையேடு

| | |
|---|---|
| (i) பெறுகை கையேட்டின் பிரிவு 2.9 இன் பந்தி 3.1.6 | ரூபா 20,000 இற்கு மேற்பட்ட கொள்வனவுகளுக்கு முறையான விலைமனுக்கள் கோரப்பட வேண்டிய போதிலும் இறக்காமம் பிரதேச செயலத்தினால் சிங்கள மொழிபயிற்சிக்கான சிற்றுண்டி மற்றும் உணவு வழங்கலுக்காக விலைமனு கோரல்கள் இன்றி ரூபா 30,000 இற்கு கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ii) பந்தி 2.7.6 (iv) | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் விலைமனு மதிப்பீட்டு குழுவில் ஆகக்குறைந்தது பெறுகையோடு தொடர்புடைய விடயத்தில் நிபுணத்துவமிக்க உறுப்பினர் ஒருவர் உள்வாங்கப்பட்டு விலை மனு மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்படப்பட்டிருந்த போதிலும் இந்நடைமுறை பின்பற்றப்படாது திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் 4 தினங்களில் இடம்பெற்ற பெறுகைக்குழு தீர்மானத்தின் அடிப்படையில் கூட்டுமொத்தம் ரூபா 3,788,999 பெறுமதியுடைய 09 இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (iii) பெறுகை கையேட்டின் அத்தியாயம் 03 மற்றும் 06, பெறுகை வழிகாட்டியின் பிரிவு 3.1.5 மற்றும் 3.1 | மீளாய்வாண்டில் திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் இரண்டு மடிக்கணினிகள் Singer Srilanka PLC அக்கரைப்பற்று எனும் வழங்குனரிடமிருந்து ரூபா 619,999 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் கணினி கொள்வனவின் போது Technical Specifications & Compliance உரியவாறு கொள்வனவிற்கு கோரும் கணினிக்கான Process, Ram, Storage, Graphics, ports, Warranty போன்ற தேவைப்பாடுகளை குறிப்பிட்டு விலைமனுக்கோரல் நடவடிக்கை பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 1947 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் (464 ஆம் அத்தியாயம்) பிரிவு 19 (2) | காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(2) ஆம் பிரிவின் கீழ் பிரிவில் வழங்கப்பட்ட காணி அனுமதிப்பத்திரங்களின் பிரகாரம், தற்காலிக மதிப்பீடு செய்யப்பட்டு லாகுகல பிரதேச செயலகத்தில் 12 கிராம சேவகர் பிரிவிலுள்ள 395 நபர்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக காணி அனுமதிப்பத்திரங்களுக்குரிய கூட்டுமொத்தம் ரூபா 4,389,000 காணி குத்தகை வருமானங்கள் நிலுவையாக காணப்படுவதுடன் உரிய நிலுவைத் தொகையினை அவர்களிடமிருந்து அறவீடு |

செய்வதற்கு அல்லது குத்தகை செலுத்தாத நபர்களுகளுக்கெதிராக உரிய சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 ஒப்பந்தங்கள் தொடர்பான வரி அறவீடு**

**பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன**

**(அ)** 2024 ஆம் ஆண்டின் அரச பெறுகைக் கையேட்டின் 9.1. G (a) பிரிவின் பிரகாரம் பெறுமதி சேர் வரிக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்குரிய வரிக் கொடுப்பனவு செய்யும் போது அந்த வரிப்பதிவு இலக்கத்தை கொண்ட முறையான வரி விலைப்பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இருப்பினும் 09 பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த வேலைகளுக்காக கூட்டுமொத்தம் ரூபா 21,327,320 பெறுமதிசேர் வரித்தொகையானது 45 ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்கான வரி விலைப்பட்டியல்கள் குறித்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுகைக் கையேட்டின் 5.13 மற்றும் 9.1. G (d) பிரிவுகளின் படி ஒப்பந்தக்காரர்களுக்கு பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டவுடன் அது குறித்த விபரங்கள் உடனடியாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும். ஆனால் 10 பிரதேச செயலகங்களில் 51 ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 15,415,404 பெறுமதிசேர் வரி தொடர்பான விபரங்கள் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2024 ஆம் ஆண்டின் அரச பெறுகைக் கையேட்டின் 9.1. G (c) பிரிவின் பிரகாரம் ஒப்பந்தகாரர்களுக்கு பிடிகாசு விடுவிக்கப்படும் போது அத்தொகைக்குரிய பெறுமதி சேர் வரி தொகையினையும் சேர்த்தே வழங்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் இரு பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த வேலைகளுக்கான 13 ஒப்பந்தகாரர்களின் பிடிகாசு தொகையாக வைப்பில் வைக்கப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 8,625,994 தொகைக்கான பெறுமதி சேர்வரி கூட்டுமொத்தம் ரூபா 1,552,678 தொகை பிடிகாசு விடுவிக்கப்படுவதற்கு முன்பே வழங்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

**3.6 வைப்புக் கணக்கு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் வைப்புக் கணக்கில் 2023 ஒக்டோபர் 03 ஆம் திகதியிலிருந்து காணப்படுகின்ற வைப்புப் பணம் ரூபா 9,900 தொடர்பாக நிதி ஒழுங்குவிதி 571 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2023 ஆம் ஆண்டு உகன பிரதேச செயலகத்திற்கு உரிய செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 1,000,000 ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் உரிய செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படாது மாவட்ட செயலகத்தின் வைப்புக் கணக்கில் 2 வருடங்களுக்கு மேலாக காணப்படுகின்றமையினை அவதானிக்க முடிந்தது.

(இ) அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தினால் பாடசாலை ஒன்றுக்காக இடத்தினை கையகப்படுத்தவதற்காக மாகாண கல்வித் திணைக்களத்தினால் ரூபா 6,500,000 வழங்கப்பட்டுள்ள போதிலும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாது 6 வருடங்களுக்கு மேலாக உரிய தொகை வைப்புக் கணக்கில் காணப்படுகின்றது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4,1 செயற்றிறன்

#### 4.1.1 நோக்கத்திற்கு முரணான செயற்பாடு

டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் வழிகாட்டலின் கீழ் ஜனாதிபதி செயலகத்தினால் PS/DAD/SA/02/10/2-1 இலக்க 2025 நவம்பர் 13 ஆம் திகதிய கடிதம் மற்றும் அம்பாரை மாவட்ட செயலகத்தின் Amp/GA/PLAN/07/PRJSH/11/1 இலக்க 2025 நவம்பர் 13 ஆம் திகதிய கடிதங்களுக்கு அமைவாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒரு மில்லியன் நிதியிலிருந்து மடிக்கணனி, மேசைக்கணனி, அச்சுப்பொறி, பல்லூடக திரையிடும் கருவி, பல்லூடக அச்சுப்பொறி மற்றும் ஒலி அமைப்பு மட்டுமே கொள்வனவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் லாகுகல பிரதேச செயலகத்தினால் ரூபா 508,000 பெறுமதியான உபகரணங்கள் குறித்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

#### 4.1.2 எதிர்பார்த்த பெறுபேற்று மட்டங்கள் அடையப் பெற்றிருக்காமை

ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உகண பிரதேச செயலகத்தினால் தோடம்பழ மர நடுகை செயற்றிட்டம் மேற்கொள்வதற்காக ரூபா 2,050,000 ஒதுக்கப்பட்டிருந்தது. இருப்பினும் உரிய செயற்றிட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னர் முறையான சாத்தியவள அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டு இதன் நோக்கத்தினை எவ்வாறு அடைவது தொடர்பாகவும் திட்டத்தினை தொடர்ந்து கண்காணிப்பது எவ்வாறு என்பதிலும் கவனம் செலுத்தப்படாமை காரணமாகவும் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப்படவில்லை.

#### 4.1.3 எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் அடையப்பெறாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) பொத்துவில் Blue Flag Beaches அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2025 கீழ் சுற்றுலாப் பயனிகளுக்கான தகவல் வழங்கும் நிலையமொன்று பொத்துவில் பிரதேச செயலக வளாகத்தினுள் ரூபா 2,708,860 பெறுமதியில் நிறுவப்பட்டுள்ளது. இருப்பினும் அறுகம்பே சுற்றுலாத்தளம் அமையப்பெற்றிருக்கும் இடத்திற்கும் கட்டிடம் நிறுவப்பட்டுள்ள பொத்துவில் பிரதேச செயலக வளாகத்திற்கும் இடையில் 4 Km வரையிலான தூரம் காணப்படுகின்றது. இதனால் சுற்றுலாப் பயணிகளுக்கான தகவல் வழங்குவதில் சிரமம் காணப்படுவதுடன் உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் கட்டடம் காணப்படுகினறமையும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் லாகுகல பிரதேச செயலகத்திட்குட்பட்ட அபேயசிங்கபுர வீதியினை புனரமைக்கும் பணிகள் AS Construction நிறுவனத்திடம் ரூபா 4,524,330 ஒப்பந்த பெறுமதிக்கு வழங்கப்பட்டு இவ் நிர்மாண வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் வீதி நிர்மாணம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு களவிஜயத்தின் போது ஒப்பந்தத்தின் அலகு நிரல் (BOQ) இலக்கம் 6.1 இன் படி வீதியில் தார் தெளிக்கும் பணிக்காக ரூபா 208,498 ஒதுக்கப்பட்டு அதற்கான முழுமையான கொடுப்பனவும் வழங்கப்பட்டுள்ளது. எனினும் களப்பரீட்சிப்பின் போது குறித்த வீதியின் பல இடங்களில் தார் முழுமையாக தெளிக்கப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது.

(இ) சுற்றுலாத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் லாகுகல பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பாணம எனும் கிராம சேவகர் பிரிவில் 2020 ஆம் ஆண்டு ரூபா 11,831,392 பெறுமதியில் Heritage Food Court நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் உரிய கட்டிடத்தினை உல்லாச பயனாளிகளுக்கு ஏற்றாற்போலும் ஒரு சிறந்த வியாபார தளமாகவும் மாற்றி செயற்றிட்டத்தின் நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதியின் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள நற்பிட்டிமுனை – 3 கிராமசேவகர் பிரிவிற்கு சிறுவர் பூங்கா அமைப்பதற்காக ரூபா 4.9 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் உரிய வேலைத்திட்டமானது கல்முனை மாநகர சபையினால் மேற்பார்வையின் கீழ் நற்பிட்டிமுனை – 3 அபிவிருத்தி சங்கத்தினால் உரிய செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது. உரிய செயற்றிட்டத்தின் சகல வேலைகளும் முடிவுறுத்தப்பட்டுள்ளதாக உரிய சங்கத்தினால் விலைப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மாநகர சபையின் ஊடாக பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய இறுதி கொடுப்பனவிற்காக ரூபா 2,538,548 பெறுமதியான காசோலை பிரதேச செயலகத்தினால் வரையப்பட்டு உரிய வேலைத்திட்டம் பூரணப்படுத்தப்படாமை காரணமாக 6 மாதங்களின் பின் உரிய தொகை அரச வருமானத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. உரிய செயற்றிட்டத்தில் மண் நிரப்புதல் வேலை மாத்திரம் முடிவுறுத்தப்பட்டிருந்து.

(உ) 2025 ஆம் ஆண்டு பண்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் கீழ் காணப்படும் வடிகானினை அபிவருத்தி செய்வதற்காக ரூபா 3.2 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. உரிய செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக ஆதம்பாவா அன்ட் சன்ஸ் நிறுவனத்துடன் ரூபா 2,703,035 பெறுமதிக்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. நீர்பாசன திணைக்களத்தின் தொழில்நுட்ப ஆலோசனையுடனும் மற்றும் கல்முனை மாநகரசபையின் மேற்பார்வையின் கீழும் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் உரிய காலவாய் மீண்டும் குப்பைகள், பிளாஸ்டிக் மற்றும சல்வீனியா போன்றவற்றினால் நிரம்பி காணப்படுகின்றது.

### 4.1.4 செயற்றிட்டம் நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) பொத்துவில் பிரதேச செயலகத்தினால் Blue Flag Beaches அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2025 கீழ் Life Saving Tower இனை புனர்நிர்மாணம் செய்வதற்காக கூட்டுமொத்தம் ரூபா 3,196,459 பெறுமதியான வேலைகள் Force Account பெறுகை முறை மூலமாக நிறைவேற்றுவதற்கு பொத்துவில் விஷேட அதிரடிப்படையுடன் உடன்படிக்கை 2025 ஒக்டோபர் 07 கைச்சாத்திடப்பட்டிருந்தது இருப்பினும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட மூன்று மாத காலப்பகுதி முடிவடைந்து 40 நாட்கள் கடந்த பின்னரும் இப் புனர்நிர்மாண வேலைகளில் கூட்டுமொத்தம் ரூபா 683,322 பெறுமதியான நிர்மாண வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான புனரமைப்பு வேலைத்திட்டம் - 2025 கீழ் 03 அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் உடன்படிக்கைகள் கைச்சாத்திட்டு 2025 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய வேலைத்திட்டங்கள் பூர்த்தியாக்கப்பட வேண்டிய போதிலும் உரிய வேலைத்திட்டங்கள் முடிவடைந்திருக்கவில்லை. இதன் பிரகாரம் இவ் மூன்று அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் உடன்படிக்கையின் நிபந்தனை 3 இன் பிரகாரம் ஒப்பந்த தொகையில் 1 சதவீதம் கூட்டுமொத்தம் ரூபா 263,250 அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சினால் அஸ்வெசும நலன்புரித் திட்டத்தில் உள்வாங்கப்படாத குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை வலுவூட்டும் நோக்கில் லாகுகல பிரதேச செயலகத்திற்கு ரூபா 303,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் பயனாளிகளிடமிருந்து ரூபா 65,500 பணம் பெறப்பட்டும்

உரிய பயனாளிக்கு வாழ்வாதார உபகரணங்களோ அதற்கான உதவிகளோ வழங்கப்படவில்லை. அரசாங்கத்தின் நோக்கமான குறைந்த வருமானம் பெறுவோரை பொருளாதார ரீதியாக வலுவூட்டும் செயற்பாடு இதன் மூலம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**4.1.5 நிதி விடுவிக்கபட்ட பின்னரும் நோக்கம் அடையப் பெறாத செயற்றிட்டம்**

2025 ஆம் ஆண்டுக்கான இணைந்த கிராமிய அபிவிருத்தி வெலைத்திட்டத்தின் கீழ் உகண பிரதேச செயலகத்தினால் காளான் வளர்ப்பு திட்டத்திற்காக ரூபா 512,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் களப்பரீட்சிப்பின் போது உரிய செயற்றிட்டத்தில் பங்குபற்றிய மொத்த பயனாளிகளில் நூற்றுக்கு 50 வீதமான பயனாளிகளினால் உரிய செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை

**4.1.6 உள்ளுர் நிதியளிக்கப்பட்ட செய்ற்றிட்டம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) பொத்துவில் பிரதேச செயலக பிரிவின் கீழ் செயற்பாட்டிலுள்ள இரண்டு அமைப்புக்களுக்கு 2025 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி மூலம் வழங்கப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 1,074,700 பெறுமதியுடைய 13 தையல் இயந்திரங்கள் அமைப்புக்களின் பொதுவான நோக்கங்களுக்கு பயன்படுத்தபடாமல் அங்கத்தவர்களின் தனிப்பட்ட வீடுகளில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இச்செயற்பாடு இத்திட்டத்தின் நோக்கமான அமைப்பின் உறுப்பினர்களின் மாதாந்த வருமானத்தை அதிகரித்தல், சுய தொழிலை ஊக்குவித்தல் மற்றும் நிலைபேறான பொருளாதாரத்தை உறுதிப்படுத்தும் நோக்கங்களுக்கு முரணாக காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி மூலம் அட்டாளைச்சேனை பிரதேச செயலக பிரிவிலுள்ள ஒலுவில் 01, கிராம சேவகர் பிரிவில் “Hela Bojun” உணவு கொள்கலன்களை நிறுவுவதற்கு ரூபா 2,265,000 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் உரிய சாத்தியவள அறிக்கை முறையாக மேற்கொள்ளாது தற்காலிகமாக தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு வடக்குப்பக்க நுழைவாயிலில் செயற்பாடுகள் அற்று கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(இ) ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2025 (IRDP) கீழ் அட்டாளைச்சேனை 17 ஆலங்குளம் ஆடை உற்பத்தியாளர் சங்கத்திற்கு 2025 டிசம்பர் 23 ஆம் திகதி ஆடை உற்பத்திகளோடு தொடர்புடைய ரூபா 3,249,927 பெறுமதியான 56 வகையான இயந்திர உபகரணங்கள், கருவிகள் மற்றும் துணிகள் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் கணக்காய்வுத் திகதி வரை 260 ஆடைகள் ரூபா 492,500 பெறுமதிக்கு விற்பனை செய்யப்பட்டு அதிலிருந்து நிலையத்திற்கான நிர்வாக செலவுகள் ரூபா 330,700 தொகை செலவு செய்யப்பட்டு மிகுதிப்பணம் ரூபா 161,800 தொகை சங்கத்திற்குரிய வங்கிக்கணக்கில் வைப்புச் செய்யப்படாது சங்க பொருளாளரின் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சினால் கிராமிய அபிவிருத்தி திட்டம் - 2025 கீழ் அக்கரைப்பற்று பிரதேச செயலகப்பிரிவிலிருந்து உள்ளடங்கப்பட்ட 04 பயனாளிகள் இத்திட்டத்திலிருந்து விலகியதன் காரணமாக அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் கூட்டுமொத்தம் ரூபா 775,000 பயன்படுத்தப்படாத நிலைமை காணப்படுகின்றது. இச்செயற்பாடானது பயனாளிகளை தெரிவு செய்யப்பட்ட முறையில் காணப்படுகின்ற குறைபாட்டினை காட்டுகின்றது. மேலும் இக்கிராம சேவகர் பிரிவிலுள்ள பயனாளிகளுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகள் இழக்கப்பட்டிருந்தமையினை அவதானிக்க முடிந்தது.

(உ) பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி -2025 இன் கீழ் அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவில் வியாபார நிலையத்தினை நிர்மாணம் செய்வதற்காக ரூபா 2,800,000

ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டத்திற்கான நிர்மாண வேலைகள் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நிர்மாணிக்கப்பட்டு ஒப்பந்தகாரர்களுக்கு பிடிகாசு நீங்கலாக பெறுமதி சேர் வரி உள்ளடங்கலாக கூட்டுமொத்தம் ரூபா 2,471,548 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் இவ் நிர்மாண வேலைகள் பூர்த்தி அடைந்து மூன்று மாதங்கள் கடந்த பின்னரும் இவ் Business Hub செயற்பாடுகளற்று பூட்டப்பட்ட நிலையில் காணப்படுகிறமை அவதானிக்கப்பட்டது. இச்செயற்பாடு இத்திட்டத்தின் நோக்கம் அடையப்பெறாமையினை வெளிப்படுத்துகின்றது.

(ஊ) பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி -2025 இன் கீழ் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 3,400,000 நிதியில் 3 கிராமசேவகர் பிரிவிற்கு ரூபா 215,000 மற்றும் ரூபா 178,500 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட அரைக்கும் இயந்திரம் பாவனையற்று காணப்படுகின்றது.

(எ) 2025 ஆம் அண்டில் நிலசெவன கட்டடங்களை புணர்நிர்மானம் செய்யும் விடய இலக்கத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற ஒதுக்கீட்டினை கொண்டு தற்போது காணப்படுகின்ற நிலசெவன கட்டடங்களை மாத்திரம் திருத்தம் மேற்கொள்ளவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் கல்முனை பிரதேச செயலகத்தினால் நற்பிட்டிமுனை – 5 கிராம சேவகர் பிரிவில் உள்ள தனியார் காணியில் ரூபா 1,970,201 பெறுமதியில் புதிய கட்டடம் கட்டப்பட்டிருந்தது.

(ஏ) கல்முனை பிரதேச செயலகத்தினால் நிலசெவன கட்டிட திருத்தத்தின் கீழ் நற்பிட்டிமுனை – 5 கிராமசேவகர் பிரிவில் நிலசெவன கட்டிட திருத்தத்திற்காக ரூபா 1,970,297 செலவு மேற் கொள்ளப்பட்டிருந்த போதிலும் முடிவுறுத்தப்படாத 6 வேலைகளுக்கும் முறையாக பூர்த்தி செய்யப்படாத 2 வேலைகளுக்குமாக ரூபா 395,815 கொடுப்பனவு மேற் கொள்ளப்பட்டிருந்ததுடன் திருத்த வேலை மேற்கொள்ளப்பட்ட கட்டிடம் நிலசெவன கட்டிடமாக காணப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கல்முனை பிரதேச செயலகத்தினால் சமூக அடிப்படையிலான சங்கங்களுடன் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படும் போது இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2024 ஆம் ஆண்டுக்கான பெறுகை கையேட்டின் பிரிவு 3.1.9 (அ)(viii) இனை பின்பற்றாது நற்பிட்டிமுனை – 5 கிராம அபிவிருத்தி சங்கத்துடன் 2025 ஒக்டோபர் 17 மற்றும் 2025 ஒக்டோபா 30 ஆகிய தினங்களில் முறை ரூபா 1.4 மில்லியன், ரூபா 2 மில்லியன் பெறுமதியான இரண்டு வேலைத்திட்டங்களுக்கு ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டிருந்தது.

(ஒ) பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 1,400,000 தொகையில் சொறிக்கல்முனை – 02 கிராம சேவகர் பிரிவில் 14 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு காடை குஞ்சுகள், கூடுகள், காடைத்தீன்கள், உபகரணங்கள், பயிற்சி செலவுகள் மற்றும் நிருவாக செலவுகளுக்கு என ரூபா 1,395,610 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. தெரிவு யெ்யப்பட்ட 14 பயனாளிகளுக்கும் தலா 100 காடைகள் 2025 ஜுலை 28 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் ரூபா 28,560 பெறுமதியான 336 காடைகள் இறந்திருந்தமையினை அவதானிக்க முடிந்தது.

(ஓ) பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 1,000,000 நிதியில் சாலம்பக்கேனி -4 வாழைத் தோட்டம் செயற்றிட்டத்திற்காக 500 லீற்றர் நீர்த்தாங்கி மற்றும் 1” மின் மோட்டார் என்பன தெரிவு செய்யப்பட்ட 07 பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டிருந்ததுடன் இதன் பெறுகை தொடர்பாக வேறு வழங்குனர்களின் நியாயமான விலை உறுதிபடுத்தல்களின் அடிப்படையில் ரூபா 41,300 தொகை மேலதிக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.3 பெறுகை நடைமுறை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் - 2025 இன் கீழ் அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவில் இடியப்ப உற்பத்தி நிலையத்தினை உருவாக்குவதற்கு தேவையான இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,345,000 இற்கு உறுதிச்சீட்டு தயாரிக்கப்பட்டு பின்னர் அதற்கான காசோலை வரையப்பட்டு 3 மாதங்கள் கடந்த போதிலும் உரிய இயந்திரம் பிரதேச செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. உரிய இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்காக Yan tech Lanka (pvt.) Ltd. கம்பனியினால் இவ் இயந்திரத்திற்கு ரூபா 500,000 பெறுமதி இட்டு விலைமனு சமர்ப்பித்ததுடன், M.H. Marketing எனும் வழங்குனரால் ரூபா 208,000 பெறுமதி இட்டு விலைமனு சமர்ப்பித்ததுடன் இதில் ரூபா 500,000 கூடிய விலைமனு சமர்பித்த Yan tech Lanka (pvt.) Ltd நிறுவனத்திடமிருந்து உரிய இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டமையினால் ரூபா 292,000 மேலதிக கொடுப்பனவு மெற்கொள்ளப்பட்டிருந்து.

(ஆ) கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சினால் கிராமிய அபிவிருத்தி திட்டம் - 2025 மூலம் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள 40 பயனாளிகளின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்திக்காக ரூபா 8.4 மில்லியன் ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. மூன்று பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 850,500 பெறுமதியான மூன்று மாடுகளின் வயதானது 6 தொடக்கம் 7 வயது வரை இருந்தமையினை அவதானிக்க முடிந்தது. இச் செயற்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுகை ஆவணம் 7.4.1 கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு முரணாக காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(இ) முதியோர்களுக்கான தேசிய அலுவலகத்தினால் நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள முதியோர்களுக்கு தேவையான குறைந்தபட்ச வசதிகள் வழங்குவதற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 898,950 பெறுமதியில் தலா ரூபா 20,800 பெறுமதியான 6’ x 3’ அளவுடைய 23 தேக்கு கட்டில்கள கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இருந்த போதிலும் உரிய காலப்பகுதியில் இறக்காமம் பிரதேச செயலகத்தினால் அதே அளவான கட்டில்கள் ஒவ்வொன்றும் ரூபா 16,500 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதனடிப்படையில் ஒரே வகையான தளபாடத்திற்கு ரூபா 98,900 தொகை நிந்தவூர் பிரதேச செயலகத்தினால் மேலதிக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

**4.4 சொத்து முகாமைத்துவம்**

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளரின் ஒதுக்கு வாகனம் விபத்துக்கு உள்ளாகியமை தொடர்பான ஆரம்ப விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட சிபாரிசின் அடிப்படையில் இவ்விபத்து தொடர்பாக மோட்டார் வாகன பரிசோதகரது அறிக்கையினை பெற்று அதனடிப்படையில் உள்ளக அல்லது வெளியக தாக்கத்தின் அடிப்படையிலா முன் கண்ணாடியில் சேதம் ஏற்பட்டது என கண்டறிதல் வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில் அம்பாறை மாவட்ட பிரதான மோட்டார் வாகன பரிசோதகரின் இவ்விபத்து தொடர்பான 2025 யூலை 31 ஆம் திகதிய அறிக்கையின் பிரகாரம், இவ்விபத்து வாகனத்தின் உள்ளே ஏற்பட்ட தாக்கத்தின் விளைவாக வாகனத்தின் முன் கண்ணாடியில் சேதம் ஏற்பட்டதாக அறிக்கை செய்யப்பட்டிருந்தது. இதனடிப்படையில் மயில் குறுக்கே பாய்ந்து வாகன முன் கண்ணாடியில் சேதம் ஏற்பட்டுள்ளது என ஆரம்ப விசாரணைக் குழுவிற்கு மற்றும் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

## 4.5 சேதங்கள் மற்றும் இழப்புக்கள்

அம்பாறை மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான சத்தாதிஸ்ஸபுர களஞ்சியசாலை 2015 செப்டெம்பர் 21 ஆம் திகதி திருடர்களால் சேதப்படுத்தப்பட்டதுடன் இதனால் ஏற்பட்ட இழப்பு ரூபா 850,738 என மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதிவரை முறையான ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) 2022/23 பெரும் போகத்தில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு மற்றும் நெல்கையிருப்பு அகற்றல் நிகழ்ச்சி திட்டம் தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் 2023 பெப்ரவரி 09 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள DRD/2023-1 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பந்தி 4.2 இற்கு அமைய நெல் கொள்வனவின் போது ஏற்படும் செயற்பாட்டு செலவுகளை உரிய நிதிப் பிரமாணம், சுற்றுநிருபங்கள் மற்றும் ஏனைய அரச அனுமதியின் கீழ் கொடுப்பனவு மேற்கொய்வதற்கு மாவட்ட செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அம்பாரை மாவட்ட செயலகத்திற்கு் சதாரண செயற்றிட்டங்களுக்கு நிர்வாகச் செலவு ஒதுக்கீடு செய்வது போன்று நெல் கொள்வனவிற்கான ஒதுக்கமான ரூபா 3,089,000,000 இற்கு 1% என்ற அடிப்படையில், மாவட்ட செயலகம் மற்றும் 17 பிரதேச செயலகங்களுக்காக ரூபா 30,890,000 தொகை நிர்வாக செலவிற்காக வேறாக்கப்பட்டு சுற்று நிருபத்திற்கு மாறாக உத்தியோகத்தர்களுக்கு ஏற்பட்ட உண்மையான செலவினத்தினை கருத்தில் கொள்ளாது அபிவிருத்தி நிதி திணைக்களத்தின் வாய்மொழிமூல ஆலோசனைக்கு அமைய அம்பாரை மாவட்ட செயலாளரின் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்ட குழு உறுப்பினர்களின் தீர்மானத்திற்கு அமைவாக ஒரு மாதத்திற்கு உரிய உத்தியோகத்தர்களின் அடிப்படை சம்பளத்தில் ¼ இற்கு சமமான தொகையினை அவர்கள் இந் நிகழ்ச்சித் திட்டத்திற்கு பங்களிப்பு வழங்கிய மாதங்களுக்கு வழங்குதல் என்ற அடிப்படையில் 2023 யூலை மாதம் வரை ரூபா 15,580,562 நிர்வாக செலவாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது இருந்த போதிலும் உகண பிரதேச செயலகத்தினால் ஒவ்வாரு உத்தியோகத்தர்களின் ஆரம்ப சம்பளத்தில் ¼ கொடுப்பனவிற்கு மேலதிகமாக பிரயாணச் செலவு மற்றும் மேலதிக நேரப்படியாகவும் 16 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 367,181 செலுத்தப்பட்டுள்ளது.

(ஆ) 2022/23 பெரும் போகத்தில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு மற்றும் நெல்கையிருப்பு அகற்றல் நிகழ்ச்சி திட்டம் தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் 2023 பெப்ரவரி 09 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள DRD/2023-1 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரிவு 2.3.2 இற்கு அமைய இந் நிகழ்ச்சித் திட்டம் 2023 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் முடிவுறுத்தப்படல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 2026 மே 08 ஆம் திகதி வரை களஞ்சியசாலைகளில் ரூபா 130,656,758 பெறுமதியான 942,194 கிலோகிராம் வெள்ளை மற்றும் சிவப்பு அரிசி தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மற்றும் உரிய நிகழ்ச்சித் திட்டம் முடிவுறுவதற்கு முன்னர் இது தொடர்பான மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிர்வாகச் செலவு தொகை உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

**4.7 முகாமைத்துவ பலவீனம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்கு அனுமதிக்கப்பட்ட ஆளணியின் பிரகாரம் 56 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேலதிக ஆளணிகளாக காணப்பட்டிருந்தும் 15 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 2025 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் கூட்டு மொத்தம் ரூபா 259,605 தொகை மேலதிக நேரப்படியாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அஸ்வெசும நலன்புரி பயனாளிகள் உள்ளடங்குகின்ற முதியோர்களுக்கான முதியோர் கொடுப்பனவு அஸ்வெசும கணக்கினூடாக வழங்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் தபால் அலுவலகத்தினூடாக முதியோர் கொடுப்பனவு பெற்று வந்து மரணித்ததன் பின்னர் நிறுத்தப்பட்ட பயனாளிகளுக்கான கொடுப்பனவு 4 பிரதேச செயலகங்களினால் அஸ்வெசும கணக்கினூடாக மீண்டும் அதே 18 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதனை அவதானிக்க முடிந்தது. இதன் விளைவாக ரூபா 610,750 மேலதிக செலவாக காணப்படுகின்றது.

(இ) அஸ்வெசும நன்மை பெறுகின்ற பயனாளியின் குடும்ப உறுப்பினர் மரணமடைந்ததன் பின்னர் அந்த குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மாற்றம் மேற் கொள்ளப்படாமை காரணமாக உகண பிரதேச செயலகத்தினால் ரூபா 145,000 மேலதிகமாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு ஏப்ரல் 29 ஆம் திகதி விபத்துக்குள்ளான மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான கெப் வாகனம் ரூபா 269,354 செலவில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு அது தொடர்பாக ஏற்பட்ட நட்டத்தினை தொடர்புடைய உத்தியோகத்தரிடமிருந்து அறிவிடுவதற்காக நிதி ஒழுங்கு விதி 105(2) இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் உரிய வாகனம் மீண்டும் 2025 ஒக்டோபர் 27 ஆம் திகதி விபத்துக்குள்ளானதுடன் இது தொடர்பாக நிதி ஒழுங்குவிதி 104(3) மற்றும் (4) நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான 4 வாகனங்கள் விபத்துக்குள்ளான போதிலும் 2025 ஒக்டோபர் 27 ஆம் திகதி விபத்துக்குள்ளான வாகனம் தவிர ஏனைய 3 வாகனங்களையும் திருத்தம் மேற்கொண்டமைக்காக ரூபா 641,723 செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இந்த விபத்துக்கள் தொடர்பாக நிதி ஒழுங்குவிதி 104(4) இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2025 ஆம் ஆண்டின் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட இறக்காமம் பிரதேச செயலகத்தின் கீழ் காணப்படும் 11 கிராம சேவகர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 100 பயனாளிகளுக்கு ஆடு வளர்ப்பு திட்டத்திற்கு ரூபா 9.75 மில்லியன் ஒதுக்கப்பட்டு அம்பாரை மாவட்ட செயலகத்தினால் பெறுகை நடைமுறை மேற்கொள்ளப்பட்டு 07 கட்டங்களில் பயனாளிகளுக்கு ரூபா 10,014,588 பெறுமதியான ஆடுகள் வழங்கி வைக்கப்பட்டிருந்தன. இதில் ரூபா 371,700 பெறுமதியான 18 பயனாளிகளின் ஆடுகள் இறந்திருந்தும் காப்புறுதி நட்டஈடு கிடைக்கப்பெறாமல் இருந்தமையினை அவதானிக்க முடிந்தது.

(எ) மாவட்ட செயலாளரின் 2026 ஜனவரி 23 ஆம் தியதிய AMP/GA/PLN/3/RRDP/9/12 இலக்கமுடைய கடிதத்தின் மூலம் துரவந்தியமேடு பாதையினை நிர்மாணம் செய்வதற்கான காலநீடிப்பு அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னர் உரிய வேலைத்திட்டம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டதாக கல்முனை வடக்கு பிரதேச செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டு பிரதி திட்டமிடல் பணிப்பாளரினால் சிபார்சு

செய்யப்பட்டு உதவி பிரதேச செயலாளரினால் அனுமதிக்கப்பட்ட பின்னர் உரிய கோவை கணக்கு பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்து. உரிய பாதைக்கான வேலைத்திட்டம் ஆரம்ப கட்ட வேலைகள் மாத்திரம் தொடங்கப்பட்ட நிலையில் போலியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அதற்காக திறைசேரியிடமிருந்து ரூபா 1,516,873 கட்டுநிதி பெறப்பட்டிருந்தது

## 05. மனித வள முகாமைத்துவம

### 5.1 இணைக்கப்பட்ட பதவியணியும் உண்மையான பதவியணியும்

2025 டிசம்பர் 31 திகதிவரை அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை 2345 ஆகவும், உண்மையான அலுவலர்களின் எண்ணிக்கை 2781 ஆகவும் காணப்பட்டதுடன் பதவியணியிலுள்ள 202 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் 638 மேலதிக பதவியணியை உரியவாறு அங்கீகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

எம்.ஜி. மதரசிங்க
பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக.

**அத்தியாயம் 04**

## 04. செயற்திறன் குறிகாட்டிகள்

### 4.1 நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டிகள் (செயற்திட்டத்தின் அடிப்படையில்)

| குறிகாட்டிகள் | எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டின் உண்மையான வெளியீட்டு வகிதாசாரம் (%) | | | |
|---|---|---|---|---|
| | **100% - 90%** | **75% - 89%** | **50% - 74%** | **0% - 49%** |
| வழங்கப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் | 100 | - | - | - |
| நடைமுறைப்படுத்தப்பட்ட சமூக நலனோம்புசெயற்பாடுகள். | 100 | - | - | - |
| வழங்கப்பட்ட வாழ்வாதார அபிவிருத்திகள் | 100 | - | - | - |
| வழங்கப்பட்ட சுற்றாடல் துறை அபிவிருத்திகள். | 100 | - | - | - |

அத்தியாயம் 05

## 05. நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான செயற்திறன்

### 5.1 அடையாளம் காணப்பட்ட நிலையான வளர்ச்சி இலக்குகள்

| நிலையான அபிவிருத்தி இலக்கின் இலக்கம் | இலக்கு | இலக்கு /நோக்கம் | வெற்றி குறிகாட்டி | இதுவரை வெற்றியை அடைந்து கொள்ளும் முன்னேற்றம் 0%-49% | 50%-74% | 75%-100% |
|---|---|---|---|---|---|---|
| 01 | 1.1 2030 ஆகும் போது உலகில் சகல இடங்களிலும் வாழ்கின்ற நபர்களின் கடுமையான வறுமையை ஒழித்தல். இன்றைய மதிப்பீட்டிற்கு அமைய ஒரு நாளைக்கு 1.25 டொலரை விட குறைந்த வருமானம் பெறுகின்றவர்கள் கடுமையான வறுமை குழுவிற்கு உரித்தாகிறது.<br><br>1.3 கீழ் மட்டத்தில் உள்ளவர்களையும் உள்ளடக்கி சகல நபர்கள் தொடர்பாகவும் தேசிய ரீதியில் பொருத்தமான சமூக பாதுகாப்பு முறையை செயற்படுத்துதல் மற்றும் 2030 ஆகும் போது வறிய மற்றும் அவதானம் மிக்க குழு போதுமானதாக அதன் மூலம் உள்ளடக்கி | சகல இடங்களிலும் காணப்படுகின்ற சகல விதத்திலும் வறுமையை முடிவுறுத்தல். | i. அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் 9.9 மி.ரூ. செலவில் 100 வறிய குடும்பங்களுக்கு வீட்டில் கால்நடை வளர்ப்பிற்கு 300 ஆடுகள் பகிர்ந்தளித்தல் மற்றும் அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் 8.45 மி.ரூபா செலவில் 40 வறிய குடும்பங்களுக்கு பசுமாடுகள் பகிர்ந்தளித்தல்.<br><br>ii. ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் 46.7 மில்லியன் ரூபா செலவில் 12 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தல்.<br><br>iii. 73,259 பயனாளிகளுக்கு அஸ்வெசும பயன்களை வழங்குதல்<br><br>iv. விவசாய உற்பத்தி செயற்திட்டங்கள் 04 ஊடாக 127 பயனாளிகளை ஊக்குவித்தல். | | | 100% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | இருத்தல்.<br>1.4 விசேடமாக வறுமையால் வாடுகின்ற மற்றும் அவதானத்திற்கு உட்படக் கூடியவர்கள் உட்பட சகல ஆண்களுக்கும் பெண்களுக்கும் 2030 ஆண்டாகும் போது பொருளாதார வளங்கள், அடிப்படை சேவைகள், காணி உரிமைகள், நிர்வகித்தல் மற்றும் வேறு முறையில் ஆதன உரித்துகள், இயற்கை வளங்கள், பொருத்தமான புதிய தொழிநுட்பங்கள் மற்றும் நுண் நிதி உட்பட நிதிச் சேவைகளுக்கு பிரவேசிப்பதற்கு சமமான உரிமைகளை உறுதிப்படுத்தல்.<br><br>1.5 2030 ஆகும் போது வறுமையில் வாடுவோர் மற்றும் அவானத்திற்கு உள்ளாகக் கூடிய நிலையில் உள்ளவர்களின் மீள்திறன் ஆற்றலை விருத்தி செய்தல் மற்றும் அவர்கள் காலநிலை நிலமைகளினால் ஏற்படுகின்ற பாதிப்பான தாக்கங்களையும் பொருளாதார சமூக மற்றும் சுற்றாடல் ரீதியாக ஏற்படுகின்ற பாதிப்புக்கள் மற்றும் அனர்த்தங்களுக்கு உள்ளாகும் ஆபத்துக்களைக் குறைத்தல். | | v. மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் 8.67 மி.ரூபா செலவில் அனர்த்த முகாமைத்துவ 03 செயற்திட்டங்களை நடத்துதல்.<br><br>vi. மாவட்ட செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவ நிலைய காலநிலையோடு தொடர்புடைய அபாயமான நிகழ்வுகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 02 | 2.1 2030 ஆகும் போது பட்டினியை ஒழித்தல் மற்றும் விசேடமாக குழந்தைகளையும் உள்ளடக்கி வறுமையில் வாடும் மற்றும் ஆபத்திற்கு உள்ளாகியுள்ள மக்களுக்கு பாதுகாப்பான, போசாக்குடைய போதியளவு உணவுகளை வருடம் முழுதும் பெற்றுக் கொள்வதற்கு முடியும் என உறுதி செய்தல். | பட்டினியை ஒழித்து, உணவு பாதுகாப்பு மற்றும் சிறந்த போசாக்கு நிலமைகளை வெற்றி பெற்று நிலையான விவசாயத்தை மேம்படுத்துதல். | i. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் 2025 கீழ் விவசாய செயற்திட்டங்களுக்கு 33.02 மி.ரூபா செலவு செய்து உணவு பாதுகாப்பிற்கு 24 செயற்திட்ட்டங்கள் மேற்கொள்ளல்.<br><br>ii. அம்பாறை மாவட்டத்தின் 256 விவசாயிகளுக்கு 209.8 ஏக்கர்களை உள்ளடக்கும் வகையில் பாசிப்பயறுச் செய்கைகளை பயிரிடுவதற்கு ரூ.890,150.03 தொகை ஒதுக்கீடுகளை ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | | | **100%** |
| 03 | 3.1 2030 ஆகும் போது உலகில் தாய் இறப்பு விகிதம் நேரடி பிறப்புக்கள் 100,000 இற்கு 70 வரை குறைத்தல்<br><br>3.4. 2030 ஆகும் போது தொற்றா நோய் காரணமாக ஏற்படுகின்ற அகால மரணம், சிகிச்சை மூலம் மற்றும் தடுக்கும் முறைகள் மூலம் மூன்றில் ஒன்றாக குறைத்தல் மற்றும் உளவியல் சுகாதாரம் மற்றும் நன்னடத்தையை மேம்படுத்தல்.<br><br>3.5 தீங்கு விளைவிக்கும் மதுப் பாவனை மற்றும் அபாயகரமான போதைப் பொருட்களின் பாவனையைத் தடுக்கும் நடவடிக்கைகளையும் சிகிச்சைகளையும் | ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதி செய்து எல்லா வயதிலும் இருக்கின்ற அனைவரின் நலன்களையும் மேம்படுத்தல். | i. போசாக்குத் தேவையுள்ள குறைந்த வருமானமுள்ள கர்ப்பினித் தாய்மார்களின் போசாக்கு மட்டத்தை பிள்ளைப் பேறு வரை நன்கு பேணிச் செல்ல உறுதி செய்வதற்கு 15,581 கர்ப்பினித் தாய்மார்களுக்கு ரூ.403,698,100.00 தொகை போசாக்கு வவுச்சர் வழங்கப்பட்டுள்ளது.<br><br>ii. கிளீன் சிறீ லங்கா வேலைத்திட்டத்திற்கு முன்னோடியாக பிரதேச செயலகங்களை அடிப்படையாகக் கெண்டு நடமாடும் சுகாதார வேலைத்திட்டமொன்றை நடத்துதல்.<br><br>iii. ஆயர்வேத திணைக்களத்தினால் 25,486 மி.ரூ. செலவில் அம்பாறை மற்றும் பொத்துவில் ஆயர்வேத வைத்தியசாலையை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தப்பட்டது.<br><br>iv. சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் | | | **100%** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | வலுப்படுத்தல். | | ஒத்துழைப்புடன் இவ் இலக்கினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>அரசின் புதிய வேலைத்திட்டமொன்றான ''வெளியேறு'' கீழ் விசப் போதைப்பொருட்களை ஒழித்தல் மற்றும் தவிர்ப்பதற்கு பல்வேறு செயற்திட்டங்கள் மற்றும் அறிவுறுத்தும் வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல். | | | |
| 04 | 4.1 2030 ஆகும் போத பயனுள்ள கற்றல் பெறுபேறுகளை பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் சகல பெண் பிள்ளைகளின் சுதந்திரம், சமமான மற்றும் தரத்தில் உயர்ந்த ஆரம்ப மற்றும் இடைநிலை கல்வியைப் பூர்த்தி செய்துள்ளதை உறுதி செய்தல்.<br><br>4.2 2030 ஆகும் போது சகல பெண் பிள்ளைகளுக்கும் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கும் தரத்தில் உயர்ந்த முன் பிள்ளைப் பருவ அபிவிருத்திக்கு, உபகாரச் சேவைகளுக்கும் மற்றும் முன் ஆரம்ப கல்விக்கு பிரவேசிக்கும் வாய்ப்பு காணப்படல் மற்றும் அதன் மூலம் அவர்கள் ஆரம்பக் கல்விக்கு தயாராக இருப்பதை உறுதி செய்தல். | பரிபூர்னமான, நியாயமான கல்வியொன்றை உறுதி செய்தல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் முழுதும் கற்கும் வாய்ப்பினை ஏற்படுத்தல். | i. மாகாண விசேட அபிவிருத்தி ஒதுக்கீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் 534.32 மி.ரூ. ஒதுக்கீட்டின் மூலம் 106 செயற்திட்டங்கள் கல்வித் துறையின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்டது.<br><br>ii. 10.3 மி.ரூபா செலவில் 7 பாடசாலைகளின் விளையாட்டு மைதானங்களின் திருத்த வேலைகள் செய்தல்.<br><br>மாவட்டத்தில் நடத்தப்படுகின்ற அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலும் மாவட்ட மட்ட உத்தியோகத்தர்கள், மாகாண மட்ட உத்தியோகத்தர்கள், மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு அங்கத்தவர்களுடன் பாடசாலை தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் மற்றும் ஆசிரியர்கள் பிள்ளைகள் தொடர்பாக ஏற்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடி பொருத்தமான தீர்வினை வழங்கி கல்வியின் தரத்தினையும் மற்றும் பாடசாலைகளின் தரத்தினையும் உறுதி செய்தல். | | | **100%** |
| 05 | 5.1 பெண்களுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் எதிராக அனைத்து இடங்களிலும் | ஆண் பெண் சமத்துவத்தை அடைந்து சகல பெண்கள் மற்றும் | i. மாவட்ட செயலகத்தின் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலகங்களில் சேவை | | | **100%** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | இடம் பெறுகின்ற சகல விதத்திலுமான வேறுபாடு காட்டுவதை ஒழித்தல்.<br>5.2 மனித கடத்தல் பாலியல் மற்றும் வேறு விதத்தில் துஷ்பிரயோகங்கள் உள்ளடங்களாக பெண்களுக்கும் மற்றும் பெண் பிள்ளைகளுக்கும் எதிராக பொது மற்றும் தனியார் இடங்களில் இடம்பெறுகின்ற சகல முறையிலான வன்முறைகளையும் ஒழித்தல்.<br><br>5.5 அரசியல், பொருளாதார, மற்றும் சாதாரண வாழ்க்கையில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் தீர்மானம் எடுக்கும் போது பெண் தலைமைத்துவம் மற்றும் சமமான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல் மற்றும் பயனுள்ள விதத்தில் பங்குபற்றுதல் உறுதி செய்தல். | பெண் பிள்ளைகளை வலுவூட்டுதல். | புரிகின்ற வேறு உரிய உத்தியோகத்தர்கள் மூலம் (உதாரணம்:- சமூக சேவை உத்தியோகத்தர்கள்) பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் வலுவூட்டும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்.<br><br>ii. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டும் போது பெண் தலைமைத்துவ தொழில் முயற்சியாளர்கள் தொடர்பில் குறித்த உத்தியோகத்தர்களின் கவனம் செலுத்துதல்.<br>iii. அட்டாளச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் 7 மி.ரூ. அளவில் செலவில் மினி காமன்ட் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தி 20 பெண்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்தல். | | | |
| 06 | 6.1 2030 ஆகும் போது சகலருக்கும் சமத்துவம் கொண்ட பாதுகாப்பான மற்றும் குறைந்த விலையில் குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமாதல்.<br><br>6.2 2030 ஆகும் போது சகலருக்கும் போதியளவு மற்றும் சமத்துவமான சுகாதார வசதிகள் பெற்றுக் | அனைவருக்கும் நீர் மற்றும் சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் அவற்றின் நிலையான முகாமைத்துவத்தை உறுதி செய்தல். | i. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட வேலைத்திட்டத்தின் கீழ் தமன பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் கொக்நகர மற்றும் கலுகொல்ல பிரதேசங்களில் 02 மி.ரூ. செலவில் இரண்டு சமூக நீர் செயற்திட்டங்களை ஆரம்பித்தல், மீள் நீர் சுத்திகரிப்பு முறைமையை நிறுவுதல் மற்றும் தெஹியத்தகண்டி பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் பெரிய கிணற்றை மறுசீரமைப்புச் செய்தல். | | | **100%** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | கொள்ளவதற்கு முடியுமாதல் மற்றும் திறந்த வெளியில் மலம் கழிப்பதை இல்லாதொழித்தல் மற்றும் விசேடமாக பெண்களின், பெண் பிள்ளைகளின் மற்றும் ஆபத்துக்கு உள்ளாகக் கூடிய நிலையில் உள்ள நபர்களின் விசேட தேவைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்துதல். | | ii. மீளக் குடியமர்த்தும் செயற்திட்டத்தின் கீழ் 8.25 மி.ரூ. செலவில் 273 பாவணையாளர்களுக்கு நீர் இணைப்புக்களை வழங்குதல்.<br>iii. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஊடாக 249.62 மி.ரூ. செலவில் 14 நீர் செயற்திட்டங்கள் அளவில் செயற்படுத்தல்.<br>iv. சகொசான் சுகாதார வசதிகள் செயற்திட்டத்தின் கீழ் 7.40 மி.ரூ. செலவில் 17 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.<br>v. நாள்பட்ட சிறுநீரக நோய் நிலமையால் பாதுகாப்பதற்கு 6 பிரதேச செயலகப் பிரிவுகளில் 25 மீள் சவ்வூடுபரவல் நீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவியுள்ளதுடன் 2025 ஆண்டில் அவ் நீர் சுத்திகரிப்பு மின் கட்டணங்களை செலுத்துவதற்கு 1.205 மி.ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. | | | |
| 07 | 7.1 2030 ஆகும் போது சகலருக்கும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளக் கூடிய நம்பகரமான நவீன எரிசக்தி மூலங்களுக்கு பிரவேசிக்க முடியும் என்பதை உறுதி செய்தல். | அனைவராலும் செலவு செய்யக் கூடிய நம்பகரமான, நிலையான மற்றும் நவீன எரிசக்தி விநியோகத்தை உறுதி செய்தல். | மீளக் குடியமர்த்தும் செயற்திட்டத்தின் கீழ் 13.88 மி.ரூ. செலவில் 358 மின் இணைப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல். | | | **100%** |
| 08 | 8.3 பயனுள்ள செயற்பாடுகளுக்கு, பொருத்தமான தொழில் வாய்ப்புகளுக்கு, தொழில் முயற்சியாளர்களுக்கு மற்றும் ஆக்கத்திறன்களுக்கு | அனைவருக்கும் தன்னிறைவான மற்றும் பூரணத்துவம் அடைந்த, நிலையான பொருளாதார விருத்தி, முழுமையான, உற்பத்தித் திறன் மற்றும் சிறந்த தொழில் | i. சிறிய அல்லது நடுத்தர அளவிலான 100 தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல்<br>ii. மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், விதாதா உத்தியோகத்தர்கள், சிறு | | | **100%** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஒத்துழைப்பு வழங்குகின்ற அபிவிருத்தி ரீதியிலான நோக்கங்கள் கொண்ட நோக்கங்களை மேம்படுத்தல். நிதிச் சேவைகளுக்கு பிரவேசிப்பதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்தி நுண், சிறிய அளவிலான மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை நிறுவுதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஊக்குவித்தல்.<br>8.5 2030 ஆகும் போது அங்கவீனர்கள் மற்றும் இளைஞர்களும் உள்ளடங்களாக சகல பெண்கள் மற்றும் ஆண்களுக்கு பயனுள்ள மற்றும் பொருத்தமான தொழில் வாய்ப்புக்களை வழங்குதல்.<br>8.9 2030 ஆகும் போது உள்நாட்டு கலாசார, உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்புக்களை மேம்படுத்தக் கூடிய நிலையான சுற்றுலாக் கைத்தொழில் தொடர்பான கொள்கைகளை திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல். | மேம்படுத்தல் செய்தல் | <br><br><br><br><br><br><br><br><br><br><br>iii. | தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபை ஊடாக சகல பிரதேச செயலகப் பிரிவுகளுடன் இணைந்து தமது வியாபார கருத்துக்களைச் செயற்படுத்துவதற்கு ஆரம்பிக்கும் வாய்ப்பினை நோக்காகக் கொண்டு பல்வேறு பயிற்சி மற்றும் நிறைய தகவல் வேலைத்திட்டங்கள் நடத்தப்பட்டன<br><br>நிலையான சுற்றுலாத் திட்ட மேம்படுத்தலுக்கு முன்னோடியாக தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவிற்குள் 9.43 மி.ரூபா ஒதுக்கீட்டின் மூலம் Blue Flag Beach செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | | | |
| 09 | 9.1 பொருளாதார அபிவிருத்தி மற்றும் மனித நடத்தைக்காக அனைவருக்கும் பெற்றுக் கொள்ளக் கூடிய மற்றும் பிரவேசிக்க முடியுமாதலைக் கவனத்தில் கொண்டு வலய | உறுதியான உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்புதல், முழுமையான மற்றும் நிலையான கைத்தொழில்மயமாக்கலை | i. | 270.49 மி.ரூபா செலவில் 104 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் 279.14 மி.ரூபா செலவில் 127 வீதி அபிவிருத்திச் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது. | | | **100%** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மற்றும் தேசிய நாட்டு எல்லைகளுக்கிடையே மேற்கொள்ளப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகளும் உள்ளடங்களாக தரமான உயர்ந்த நம்பகரமான நிலையான மற்றும் அனர்த்தங்களுக்கு தாக்குப் பிடிக்கக் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.<br>9.2 சகலரையும் உள்ளடக்கக் கூடியதும் மற்றும் நிலையான கைத்தொழில் மயமாக்கலை மேம்படுத்தல், 2030 ஆகும் போது தேசிய நிலமைக்கு ஏற்புடைய தொழில் வாய்ப்புக்களை வழங்கும் போது கைத்தொழில் துறையின் பங்களிப்பு எடுத்துக் காட்டக் கூடிய வகையில் உயர்த்துதல் மற்றும் ஆகக் குறைந்தது அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளில் இந்த பங்களிப்பினை இரு மடங்காக ஆக்குதல். | மேம்படுத்தி நவீனமயமாக்கலை ஊக்குவித்தல். | ii. மீளக் குடியமர்த்தும் செயற்திட்டத்தின் கீழ் 71.33 மி.ரூபா தொகை செலவில் 31 உள்ளக வீதிகள் பழுதுபார்த்தல். | | | |
| 10 | 10.1 2030 ஆகும் போது சனத்தொகையில் கீழ் மட்டத்தில் இருக்கின்ற 40% ஆனவர்களின் வருமான விருத்தி தேசிய மட்டத்தின் சாதாரண பெறுமதியை விட அதிகமாக படிப்படியாக விருத்தி செய்தல் மற்றும் பேணிச் செல்லல். | நாடுகளுக்குள் மற்றும் அவற்றுக்கிடையே சமமின்மையைக் குறைத்தல். | i. இதன் கீழ் விசேட நிவாரண வேலைத்திட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற அஸ்வெசும வேலைத்திட்டத்தின் கீழ் விசேடமாக அடையாளங் காணப்பட்ட வறுமை மட்டம் கீழ் மட்டத்தில் இருக்கின்ற நபர்களுக்கு பொருளாதார நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. அதன் கீழ் 73,259 பயனாளிகளுக்கு அஸ்வெசும பயனாளிகளுக்கு வழங்குதல். | | | **100%** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 10.2 2030 ஆகும் போது வயது, பாலியல், அங்கவீனம், இனம், சாதி, மதம் அல்லது பொருளாதார அல்லது வேறு நிலமை தொடர்பாக பாகுபாடு இன்றி சகலரினதும் சமூக பொருளாதார மற்றும் அரசியல் உள்ளடக்கத்தை வலுவூட்டுதல் மற்றும் மேம்படுத்தல். | | ii. நீதிமன்ற, சிறைச்சாலைகள் விடயங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் செற்படுத்தப்படும் தேசிய ஒருங்கிணைப்பினை மேம்படுத்தும் விசேட செயற்திட்டம் (ஆபத்தான நிலைக்கு உள்ளான பெண் தலைமைத்துவ குடும்பங்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல், ஆபத்தான நிலைக்கு உள்ளான பாடசாலைப் பிள்ளைகளை வலுவூட்டுதல் மற்றும் புனர்வாழ்வளிக்கப்பட்ட நபர்கள் மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையானதில் இருந்து புனர்வாழ்வளிக்கப்பட்ட இளைஞர் யுவதிகள் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி )மாவட்ட செயலகம் ஊடாக ஒவ்வொரு வருடத்திலும் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் மேற்கொள்ளப்படும். | | | |
| 11 | 11.1 2030 ஆகும் போது சகலருக்கும் பாதுகாப்பான மற்றும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளக் கூடிய வீடு மற்றும் அடிப்படை சேவைகளுக்கு பிரவேசம் உறுதி செய்தல் மற்றும் குடிசை வீடுகளை முன்னேற்றுதல்.<br><br>11.2 விசேடமாக அவதானத்திற்கு உள்ளாகக் கூடிய நிலையில் உள்ள பெண்கள் , சிறுவர்கள், அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் வயோதிப | நகரங்களையும் குடியிருப்புக்களையும் முழுமையான, பாதுகாப்பான, உறுதியான மற்றும் நிலையானதாக அமைத்தல். | i. மீளக் குடியமர்த்தும் வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் 189 வீடமைப்பு செயற்திட்டங்கள் முடிக்கப்பட்டன. (0.9 மி.ரூ. வீடுகள் - 92, 1.5 மி.ரூபா வீடுகள் - 97)<br>ii. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் 282.7 மி.ரூபா. செலவில் 344 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது.<br>iii. மீளக் குடியமர்த்தும் வேலைத்திட்டத்தின் கீழ் 71.336 மி.ரூ. செலவில் வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் 31 நடைமுறைப்படுத்தப்பட்டது. | | | **100%** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | நபர்களுக்கு விசேட கவனம் செலுத்தி பெருந்தெருக்களின் பாதுகாப்பினை உயர்த்துதல், பொது வாகன முறைமையை கவனத்தில் கொள்ளத்தக்க மட்டத்தில் விரிவுபடுத்துதல் மூலம் 2030 ஆகும் போது சகலருக்கும் பாதுகாப்பான குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளக் கூடிய மற்றும் நிலையான போக்குவரத்து முறைமையை வழங்குதல்.<br>11.4 உலகில் இயற்கை மற்றும் கலாச்சார மரபுரிமைகளைப் பராமரித்தல் மற்றும் பாதுகாத்தலுக்கான முயற்சிகளை வலுப்படுத்தல்.<br><br>11.5 2030 ஆகும் போது வறுமையில் மற்றும் ஆபத்திற்கு உள்ளாகக் கூடிய நிலையில் உள்ள நபர்கள் தொடர்பாக கவனம் செலுத்தி நீரின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அழிவுகள் உட்பட அனர்த்தங்களினால் உலகின் மொத்த தேசிய உற்பத்திக்கு ஏற்படுகின்ற நேரடி பொருளாதார பாதிப்புக்களை கவனத்தில் கொள்ளத் தக்கதாக குறைத்தல் மற்றும் அதன் மூலம் தாக்கத்திற்கும் மரணத்திற்கு உள்ளாகின்ற நபர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு | | iv. மத மற்றும் கலாசார துறையின் அபிவிருத்திக்கு 40.85 மி.ரூபா செலவில் 58 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டது.<br>v. பிரதேச செயலக மட்டத்தில் கிளீன் சிறீ லங்கா 08 வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.<br>vi. திட்வா சூறாவளி மூலம் பாதிக்கப்பட்ட மக்களை மீண்டும் இயல்பு வாழ்க்கைக்கு மீட்டெடுப்பதற்காக அனர்த்தங்களுக்கு உள்ளான குடும்பங்களுக்கு 368.92 மி.ரூ. உதவி வழங்குதல். | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | குறைத்தல். | | | | | |
| 12 | 12.2 2030 ஆகும் போது இயற்கை வளங்கள் நிலையான விதத்தில் முகாமைத்துவம் செய்தல் மற்றும் வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நெருங்குதல். | நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதி செய்தல். | i. மாவட்ட விவசாயப் பிரிவு, மாகாணங்களுக்கிடையிலான விவசாயத் திணைக்களம் மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்கள் ஊடாக நிலையான விவசாயம் மற்றும் உற்பத்தி முறை மற்றும் அறுவடையின் பின்னரான பாதிப்புக்களைக் குறைக்கும் முறைகளை கடைபிடிப்பதற்கு விவசாயிகளை அறிவுறுத்தப்பட்டது. | | | **100%** |
| 13 | 13.1 சகல நாடுகளின் காலநிலை தொடர்பான பேரிடர் மற்றும் இயற்கை அனர்த்தங்களுக்கு தாங்கி நிற்கும் மற்றும் அவ்வாறான நிலமைகளுக்கு முகங்கொடுக்கும் ஆற்றலை வலுப்படுத்தல்.<br><br>13.3 காலநிலை மாற்றங்களை குறைத்தல், அதற்கமைய மாற்றியமைத்துக் கொள்ளல், தாக்கங்களைக் குறைத்தல் மற்றும் முன்கூட்டியே விபத்துக்கள் தொடர்பான | காலநிலை பேரழிவுகள் மற்றும் அவற்றின் தாக்கங்களுக்கு எதிராக விரைவில் செயற்படுதல். | i. 2025 நவம்பர் மாதம் ஏற்பட்ட திட்வா சூறாவளி மற்றும் வெள்ளப்பெருக்கு நிலமைக்குள் மாவட்ட செயலகத்தின் ஆளணியினர், பிரதேச செயலகங்களின் ஆளணியினர் அனர்த்த முகாமைத்துவ அலகின் ஆளணியினர், இலங்கை பொலிஸ், இராணுவம் மற்றும் ஏனைய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு பாரிய கடமைப் பொறுப்புக்கள் நிறைவேற்றினர்.<br><br>ii. மாவட்டத்தின் அனர்த்தங்களை குறைக்கும் 03 செயற்திட்டங்களை 8.67 மி.ரூபா செலவில் நடைமுறைப்படுத்தல்.<br><br>iii. ii) இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்தின் ஒருங்கிணைந்த நீர் வழி மற்றும் நீர் வள முகாமைத்துவ செயற்திட்டம் (IWWRMP) மற்றும் CResMPA | | | **100%** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | கல்வி, விழிப்புணர்வுகளை மேம்படுத்துதல் மற்றும் மனித மற்றும் நிறுவன இயலளவுகளை மேம்படுத்துதல். | | செயற்திட்டத்தின் கீழ் குளங்கள் பழுதுபார்த்தல் மற்றும் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.<br><br>iv. சிறிய நீர்ப்பாசனத்தின் கீழ் கமநல அபிவிருத்தி திணைக்களம் ஊடாக 53.385 மி.ரூபா செலவு செய்து 43 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டது. | | | |
| 14 | 14.1 2025 ஆகும் போது சமுத்திர கழிவுகள் மற்றும் நீர் வளங்கள் மாசுபடுதல் உட்பட விசேடமாக தரைநிலங்களை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகள் மூலம் இடம் பெறுகின்ற சகல விதத்திலான கடல் மாசுபடுதலைத் தவிர்த்தல் மற்றும் கவனத்தில் கொள்ளத் தக்க மட்டத்தில் குறைத்தல்.<br><br>14.2 2020 ஆகும் போது அனர்த்தங்களுக்கு தாக்குப் பிடிப்பதற்கு வலுவூட்டும் மற்றும் சுகாதார மற்றும் உற்பத்தித் திறன் கொண்டதான முறையில் கடல்களை நல்ல நிலமைக்கு உருவாக்கும் கடல் மற்றும் கரையோரச் சூழல் முறைமையை நிலைபேறான முறையில் முகாமைத்துவம் செய்தல் மற்றும் பாதுகாகத்தல்.<br><br>14.5 2020 ஆகும் போது | நிலையான அபிவிருத்திக்கு சமுத்திரம், கடல் மற்றும் சமுத்திர வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் சிக்கனமாகப் பயன்படுத்துதல். | i. இதன் கீழ் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களம், சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் மீன்பிடி மற்றும் நீரியல் வள திணைக்களத்துடன் இணைந்து சமுத்திர சூழல் மற்றும் கடலோர சுற்றாடல் முறைமையை பாதுகாப்பதற்கும், கடற்றொழில் வளங்கள் ஊடாக நாட்டிற்கு உரித்தாகின்ற பொருளாதாரப் பயன்களை அபிவிருத்தி செய்வதற்கும் பல்வேறு வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் கடலரிப்பினைத் தடுப்பதற்கு கல்முனைப் பிரதேசத்தில் கடற்கரையை அண்டியதாக செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது.<br><br>ii. பொத்துவில் பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் 9.43 மி.ரூபா செலவில் புலு பிளேக்ஷிப் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டது.<br>iii. நிலையான அபிவிருத்தியின் மூலம் சுற்றுலா கவர்ச்சியினை மேம்படுத்துவதற்கு அரச தாபனம், அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் பல்வேறு தனியார் நிறுவனங்கள் ஊடாக பானம் கடற்கரையை அண்டியதாக பல்வேறு செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது. | | | **100%** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | சிறந்த விஞ்ஞான ரீதியான தகவல்கள் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு ஏற்புடையதாக கரையோர மற்றும் சமுத்திர பிரதேசங்களில் 10% ஐ பாதுகாத்தல்.<br><br>14.7 2030 ஆகும் போது நிலையான வகையில் கடற்றொழில் வளங்கள், நீர் சார்ந்த கலாசாரம் மற்றும் சுற்றுலாக் கைத்தொழில் முகாமைத்துவம் மற்றும் நிலைபேறான முறையில் கடல் வளங்களைப் பயன்படுத்தி அபிவிருத்தி அடைந்து வரும் சிறிய தீவு நாடுகளுக்கும் ஆகக் குறைந்த அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளுக்கு கிடைக்கின்ற பொருளாதார பயனை விருத்தி செய்தல் | | iv. பொத்துவில் - அருகம்பே சுற்றுலா வலயத்தை அண்டியதாக வீதி விளக்குகள் பொருத்துதல். | | | |
| 15 | 15.1 2020 ஆகும் போது நிலத்தின் மற்றும் தரையின் உள்ளே காணப்படும் நன்னீர் சுற்றாடல் முறைமை மற்றும் அவற்றினால் கிடைக்கக் கூடிய சேவைகள், விசேட காடுகள், மலைகள் மற்றும் உலர் நிலங்கள் சர்வதேச உடன்படிக்கைகளுக்கு ஏற்புடைய வகையில் பாதுகாப்பு, மீளக் கட்டியெழுப்புதல் மற்றும் நிலைபேறான முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்தல். | புவியியல் சூழல் முறைமைகளின் நிலையான பயன்பாடு, நிலையான வன முகாமைத்துவம், பாலைவனமாக்குவதற்கு எதிராக செயற்படல், மீட்டெடுத்து பாதுகாத்து மேம்படுத்துதல், காணி சீரழிவினை நிறுத்துதல் மற்றும் புனரமைத்து பாதுகாத்து மேம்படுத்துதல், காணி சிதைவை நிறுத்துதல், புனர்வாழ்வு மற்றும் | i. கிளீன் சிறீ லங்கா வேலைத்திட்டத்திற்கு முன்னோடியாக பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களை அடிப்படையாகக் கொண்டு சுற்றுச்சூழல் வேலைத்திட்டங்களை நடத்துதல்.<br><br>ii. அம்பாறை குளத்தின் ஒதுக்கு வனத்தில் பல்லாண்டு தாவரங்களை நடும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல். | | | **100%** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 15.2 2020 ஆகும் போது சகல வகையான காடுகளையும் நிலையான முறையில் முகாமைத்துவம் செய்து மேம்படுத்துதல், காட்டு அழிவினை நிறுத்துதல், அழிந்த காடுகளை பழைய நிலமைக்கு ஆக்குதல் மற்றும் உலகளவில் காடு வளர்ப்பினைவும் மீள் காடு உற்பத்தியை விருத்தி செய்தல். | பல்லுயிர் அழிவினை நிறுத்துதல் | | | | |
| 16 | 16.3 சகலருக்கும் சட்டத்தின் நியாயத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமானதும் சர்வதேச அளவில் சட்டத்தின் மேலாதிக்கத்தை மேம்படுத்தல்.<br>16.5 அனைத்து வகையான இலஞ்சம் மற்றும் ஊழல்களை குறிப்பிடத்தக்களவு குறைத்தல்<br>16.6 சகல மட்டங்களிலும் செயல்திறன் மிக்க பொறுப்புக் கூறல் கொண்ட மற்றும் வெளிப்படைத்தன்மை வாய்ந்த நிறுவனங்களை நிறுவுதல்.<br>16.9 பிறப்புக்களை பதிவு செய்தல் உட்பட 2030 ஆகும் போது அனைவருக்கும் சட்டரீதியான ஆள்அடையாளத்தை வழங்குதல்.<br>16.10 தேசிய சட்ட | நிலையான அபிவிருத்திக்கு முன்னோடியாக மற்றும் முழுமையான சமூகமொன்றை உருவாக்குதல், நீதிக்கு அனைவருக்கும் வாய்ப்பினை வழங்குதல் மற்றும் எல்லா மட்டத்திலும் செயல்திறனான, பொறுப்புடைய நிறுவனமொன்றைக் கட்டியெழுப்புதல். | i. அனைத்து மட்டங்களிலும் செயல்திறன் மிக்க, பொறுப்புக்கூறக்கூடிய மற்றும் வெளிப்படையாக விளங்கும் வகையில் தாபனங்களை அபிவிருத்தி செய்து ஊழல் மற்றும் இலஞ்சத்தைத் தடுப்பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு மாவட்ட செயலகத்திற்குள் உள்ளக விடய அலகினை நிறுவுதல்.<br>ii. புதிதாக பிறந்த குழந்தைகளின் பிறப்பினை பதிவு செய்தலை அவர்கள் பிறந்து 03 மாதத்திற்குள் நிறைவு செய்து தாமதமின்றி பிறப்புச் சான்றிதழை விநியோகித்தல்.<br>iii. தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கோரப்படுகின்ற தகவல்களை எந்தத் தாமதமும் இன்றி வழங்குதல். | | | **100%** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | முறைமைக்கும் சர்வதேச பிரகடணம், உடன்படிக்கைகளுக்கு அமைய பொது மக்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு உள்ள உரிமையை உறுதி செய்தல் மற்றும் அடிப்படை சுதந்திரத்தை பாதுகாத்தலை உறுதி செய்தல். | | | | | |
| 17 | 17.1 வரி மற்றும் வேறு வருமானங்களைச் சேகரிப்பதை விருத்தி செய்வதற்கு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு சர்வதேச ஒத்துழைப்பை வழங்குதல் உள்ளிட்ட உள்நாட்டு வளங்களை நேரடியாகப் பயன்படுத்துதல்.<br><br>17.8. 2017 ஆகும் போது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு தொழிநுட்ப வங்கி மற்றும் விஞ்ஞான தொழிநுட்பம் மற்றும் புத்தாக்க இயலளவினை கட்டியெழுப்பும் பொறிமுறையை முழுமையாக செயற்படுத்தல் மற்றும் விசேடமாக தகவல் தொழிநுட்பம் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் புதிய தொழிநுட்பத்தை பயன்படுத்துவதை முன்னேற்றம் செய்தல். | நிலையான அபிவிருத்திக்கு உலகலாவிய ஒத்துழைப்பினை செயற்படுத்தக் கூடிய முறைகள் மற்றும் புதிய முன்னெடுப்புக்களையும் வலுப்படுத்தல். | i. சுற்றாடலுக்கு உகந்த தொழிநுட்பத்தை பயன்படுத்தி புதிய உற்பத்திகளை மேற்கொள்வதற்கு நபர்களை ஊக்குவிப்பதற்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் நடத்தப்பட்டன.<br>ii. பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களினால் கிடைத்த உதவிகள் கிராமிய மக்களின் வசதிகளை முன்னேற்றம் செய்வதற்கு பயன்படுத்தப்பட்டன.<br>iii. பிளாஸ்டிக் மற்றும் பொலிதீனிற்கு பதிலாக மாற்றீடாக களிமண், பிரம்பு போன்ற இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி சுற்றாடலுக்கு உகந்த உற்பத்திகளை மேற்கொள்ளல் தொடர்பாக மாவட்ட சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களினால் கிராமிய தொழில் முயற்சியாளர்களை அறிவுறுத்தப்பட்டது.<br>iv. விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைச்சினால் ரூ.113,000.00 செலவில் விதாதா வேலைத்திட்டமொன்றை செயற்படுத்தல். | | | 100% |

**5.2 நிலையான வளர்ச்சி இலக்குகளின் சாதனை மற்றும் சவால்களை சுருக்கமாக விளக்குதல்**

நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் போது கீழே குறிப்பிட்ட சவால்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது.

1. அத்தியவசிய ஔடதம் மற்றும் வைத்திய உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளும் சிரமம்

2. திட்வா சூறாவளி மற்றும் அதன் மூலம் ஏற்பட்ட வெள்ள நிலமை போன்ற அசாதாரண காலநிலை காரணமாக மாவட்டத்தின் மக்களின் இருப்பிடங்கள் இல்லாமல் போனமை, போக்குவரத்து முறைமை தடங்கல் ஏற்பட்டமை, அறுவடைகள் பாதிப்பு ஏற்பட்டமை, கல்வி விடயங்களுக்கு தடங்கல் ஏற்பட்டமை உட்பட பாரிய சிரமமான நிலமைகள் ஏற்பட்டமை

3. மேற்படி இயற்கை பேரழிவு நிலமை காரணமாக மாவட்ட மக்களின் வருமான நிலமை குறைதல் மற்றும் நாளாந்த தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு போசாக்குள்ள உணவுகளை பெற்றுக் கொள்ளல் சிரமம் போன்ற நிறைய சிரமங்களுக்கு முகங் கொடுத்தல்.

எனினும் மேற்படி சகல சவால்களுக்கும் மத்தியிலும் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு மாவட்ட செயலகத்திற்கு முடியுமானது.

**அத்தியாயம் *06***

## 06. *மனித வள விபரம்*

### 06.1 *பதவியணி முகாமைத்துவம்*

| # | அங்கிகரிக்கப்பட்ட ஆளணியினர் | தற்போதுள்ள ஆளணியினர் | வெற்றிடம் | மேலதிகம் |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட | 98 | 74 | 24 | - |
| மூன்றாம் நிலை | 76 | 42 | 34 | - |
| இரண்டாம் நிலை | 1914 | 2428 | 122 | 636 |
| ஆரம்ப நிலை | 257 | 233 | 25 | 1 |
| **மொத்தம்** | **2345** | **2777** | **205** | **637** |

### 06.2 பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக

சிரேஸ்ட மற்றும் மூன்றாம் நிலை உத்தியோகத்தர்களின் வெற்றிடம், இம்மாவட்டத்தில் இருக்கின்ற உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி அந்தந்த கடமைகளை தழுவல் கடமைகளாக நிறைவேற்றிக் கொள்ளப்படும். இதனால் உத்தியோகத்தர்களினால் தழுவல் கடமை மேற்கொள்ள வேண்டிய கடமை எல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. ஆரம்ப உத்தியோகத்தர்களின் காணப்படுகின்ற வெற்றிடம் இம் மாவட்டத்தில் இருக்கின்ற உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி குறித்த கடமைகளை நிறைவேற்றிக் கொள்ளல் மேற்கொள்ளப்படுகிது.

06.3 *மனித வள அபிவிருத்தி*

| தொ.இல | வேலைத்திட்டத்தின் பெயர் | பயிற்சி அளிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | வேலைத்திட்டத்தின் கால எல்லை | மொத்த முதலீடு (Rs'000) | | வேலைத்திட்டத்தின் தன்மை (உள்நாட்டு/ வெளிநாட்டு) | வெளியீடு/பெற்றுக் கொண்ட அறிவு* |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | உள்நாட்டு | வெளிநாட்டு | | |
| 01 | சாரதி மனப்பாங்கு மற்றும் தொழில் அறிவினை மேம்படுத்துதல | 45 | 2025.02.24 | 28,440.00 | | உள்நாட்டு | சாரதி மனப்பாங்கு மற்றும் தொழில் அறிவினை மேம்படுத்துதல் |
| 02 | கிராம உத்தியோகத்தர்களுக்கு 90 மணித்தியாலப் பயிற்சி | 6 | 2025.02.24 – 2025.03.18 | 50,970.00 | | உள்நாட்டு | கிராம உத்தியோகத்தர்களுக்கு விடய அறிவு அபிவிருத்தி |
| 03 | கிராம உத்தியோகத்தர்களுக்கு இரு நாள் பயிற்சி | 243 | 2025.06.05 – 2025.06.19 | 225,260.00 | | உள்நாட்டு | கிராம உத்தியோகத்தர்களுக்கு விடய அறிவு அபிவிருத்தி மற்றும் பொது மக்கள் பிரச்சினைகளைத் தீர்த்தல் |
| 04 | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கு சேவை ஆரம்ப பயிற்சி | 21 | 2025.09.08 – 2025.09.12 | 80,295.00 | | உள்நாட்டு | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கு விடய அறிவு வழங்குதல் |
| 05 | பெறுகை தொடர்பான இருநாள் பயிற்சி | 100 | 2025.09.26/27 | 216,875.00 | | உள்நாட்டு | பெறுகை விடயம் தொடர்பான அறிவினை இற்றைப்படுத்துதல் |
| 06 | வருமான வரி ஆவணங்களை பதிவேற்றும் பயிற்சி | 62 | 2025.10.17 | 72,400.00 | | உள்நாட்டு | வருமான வரி ஆவணங்களை பதிவேற்றுதல் |
| 07 | PL தொகுதி உத்தியோகத்தர்களுக்கான இருநாள் பயிற்சி | 107 | 2025.10.23/24 | 107,650.00 | | உள்நாட்டு | உத்தியோகத்தர் மனப்பாங்கு மற்றும் தொழில் அறிவினை மேம்படுத்துதல் |

## 07. அத்தியாயம்

## 07. இணக்கப்பாட்டு அறிக்கை

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது |
|---|---|---|---|---|
| 1 | **பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன** | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணக்கமானது | | |
| 1.2 | அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு | இணக்கமானது | | |
| 1.3 | வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்) | - | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | - | | |
| 1.5 | சிறப்பு முற்பணக் கணக்கு | - | | |
| 1.6 | ஏனைய | - | | |
| 2 | **புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.445)** | | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவு/தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.7 | பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.9 | இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.10 | பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.11 | அடிக்கட்டை புத்தகங்களின் (GA – N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 03 | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன | இணக்கமானது | | |
| 3.2 | நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறிவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது | இணக்கமானது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கள் வாங்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 3.4 | 2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை. | இணக்கமானது | | |
| 4 | **வருடாந்த திட்டத்தனைத் தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.2 | வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 4.5 | வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| 5 | **கணக்காய்வு வினாக்கள்** | | | |
| 5.1 | அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| 6 | **உள்ளகக் கண்காய்வு** | | | |
| 6.1 | நி. பி. 134(2) டி.எம்.ஏ/1-2019 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 6.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல். | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 6.3 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40(4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 6.4 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதி பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல். | இணக்கமானது | | |
| 7 | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | டிஎம்ஏ 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன | இணக்கமானது | | |
| 8 | **ஆதன முகாமைத்துவம்** | | | |
| 8.1 | ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 01/2017, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் | இணக்கமானது | | |
| 8.2 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமாதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். | இணக்கமானது | | |
| 8.3 | அரச நிதி சுற்றறிக்கை இல. 05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன | இணக்கமானது | | |
| 8.5 | நி.பி 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது | இணக்கமானது | | |
| 9 | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 9.2 | கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும். | இணக்கமற்றது | உரிமைத்துவம் மாவட்டச் செயலாளருக்குரியது அல்ல | கையகப்படுத்துதலுக்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், அனுமதி கிடைத்தவுடன் நாங்கள் அதனை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்போம் |
| 9.3 | வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும் | இணக்கமானது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி நட வடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இணக்கமானது | | |
| 9.5 | 2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016/30 இன் பத்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல். | இணக்கமானது | | |
| 9.6 | குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும். | இணக்கமானது | | |
| 10 | **வங்கி கணக்குகளின் முகாமை** | | | |
| 10.1 | உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 10.2 | மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல் | இணக்கமானது | | |
| 10.3 | வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல். | இணக்கமானது | | |
| 11 | **நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்** | | | |
| 11.1 | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல். | இணக்கமானது | | |
| 11.2 | நி.பி. 94(1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும். | இணக்கமானது | | |
| 12 | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல் | இணக்கமானது | | |
| 12.2 | நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல். | இணக்கமானது | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல் | இணக்கமானது | | |
| 13 | **பொது வைப்புக் கணக்கு** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| 13.1 | காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | இணக்கமானது | | |
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 14 | **முன்பணக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| 14.2 | நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும் | இணக்கமானது | | |
| 14.3 | நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல் | இணக்கமானது | | |
| 14.4 | மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும் | இணக்கமானது | | |
| 15 | **வருமான கணக்கு** | | | |
| 15.1 | விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும் | இணக்கமானது | | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும் | இணக்கமானது | | |
| 15.3 | நி.பி 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 16 | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 16.2 | ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல் | இணக்கமானது | | |
| 16.3 | 20.09.2017 திகதியிட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல. 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 17 | **பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்** | | | |
| 17.1 | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல் | இணக்கமானது | | |
| 17.2 | அமைப்பு பற்றிய தகவல்களை அதன் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள் / குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல். | | | |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 18 | **பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்** | | | |
| 18.1 | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல். | இணக்கமானது | | |
| 18.2 | சுற்றறிக்கையின் பத்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது. | இணக்கமானது | | |
| 19 | **மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல். | இணக்கமானது | | |
| 19.2 | ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும். | இணக்கமானது | | |
| 19.3 | மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. | இணக்கமற்றது | *2023 நவம்பர் 30 ஆம் திகதியிட்ட அரச நிர்வாகச் சுற்றறிக்கை இல. **02/2018*** (I)<br>*இன் மூலம்**,** செயல்திறன் உடன்படிக்கைகளை தயாரிப்பது ரத்து செய்யப்பட்டுள்ளது* | |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.4 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல். | இணக்கமானது | | |
| 20 | **கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்** | | | |
| 20.1 | முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல் | இணக்கமானது | | |

*முற்றும்*